


786/92

# தர்கா

சாஹெப்


کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!


**உரூஸ் 20**
**இதழ் 19**

ஜமாதுல் அவ்வல் – 1432
மே – 2011

**நன்கொடை : ரூ. 5/-**
**ஆண்டு சந்தா : ரூ. 50/**


## இதழின் உள்ளே ......


தர்கா இதழ் கட்டுரைப் போட்டியில் பரிசு மழை ... 2
**முஹ்யித்தீன் ஆண்டகை வாய்மை வரலாறு ...** 3
**மரணத்திலிருந்து மீண்டு வந்த சம்பவம்...** 4
**ஜியாரத் செய்வது ஆகுமா?** 5
**திருமறையின் தெளிவுரை...** 6
**புதையல்...** 7
**அறிவுச் சுரங்கம்...** 8
**மாநபியின் மணிமொழிகள்...** 9
**ஒட்டகனாரின் செய்திகள்...** 10
**அனு சக்தி வேண்டாம்!...** 11
**மார்க்க சட்ட விளக்கங்கள்...!** 12
**திகைப்பான கேள்விகளுக்கு திறமையான பதில்கள்...!** 14
**உஸ்தாதுல் உலமா நூஹ் முஹ்யித்தீன் ஆலிம் ஹஜ்ரத் அவர்களுடன் ஓர் நேர்காணல்...!** 15
**நாகூர் நாயகத்தின் மகிமை** 16
**அல்லாஹ்வின் கட்டளை** 18
**உரூஸ் விழா செய்திகள்...!** 20


## தேவைக்கும்,தொடர்புக்கும்...


**M.SYED AHMED M.A.,**
**Editor Saheb Dargah Monthly,**
**74/176-A, Ghandiji Road, Ist Floor,**
**Opp.Erattai Mastan Dargah,**
**Thanjavur - 613007**
**Phone : 04362-270786**
**e-mail : editor@sahebdargah.org**
**www.sahebdargah.org**



**Printed by**
Manickam Printers,Thanjavur - 613001
Phone : 04362 - 237953

**RNI No. TNTAM/2009/30120**
**Rnp No.SSP/TJ/29/10-12/TJI Posted On 5th day of the Month at Thanjavur H.O.**

அடுத்த வெளியீடு : ஜுலை **–2011**


Please Visit :
www.aulia-e-hind.com

*நாரயே தக்பீர்! அல்லாஹு அக்பர்!!*   *நாரயே ரிஸாலத்! யா ரஸூலல்லாஹ்!!*   *நாரயே விலாயத்! யா முஹ்யித்தீன்!!*

# நாகூராரின் வருகை ஓர் முன்னறிவிப்பு...!

## நாகூராரின் பிறப்பிற்கு 400 ஆண்டுகளுக்கு முன்பே அஜ்மீர் ஹாஜா நாயகத்திடம் முஹ்யித்தீன் ஆண்டகையால் அறிமுகப்படுத்தப்பட்ட அற்புதம்...!

அஜ்மீர் ஹாஜா நாயகம் அவர்கள் தங்களின் ஷைகும் முர்ஷிதுமான ஹாஜி உஸ்மான் ஹாரூனி அவர்களால் இறையோனின் திரு இல்லம் கஃபாவில் நிலை நிறுத்தப்பட்டு விலாயத்தின் வியத்தகு பதவி அறிவிக்க, மாநபியின் மாநகர் மதீனாவிற்கு அனுப்பப்பட்டு அதாயே ரஸூல் – இந்துஸ்தானத்து வலிமார்கள் பிரதிநிதியாய் ரஸூலால் வழங்கப்பட்டு, பாக்தாது செல்லும் அங்கு உமக்கு வலிமார்கள் கோமான் தீனை ஹயாத்தாக்கிய முஹ்யித்தீன் அப்துல் காதிர் மூலம் வழிகாட்டப்படுவீர் என்று அல்லாஹ்வின் புலியான ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு மூலம் முராகபா தியானத்தில் மூழ்கி முஷாஹதா திருக்காட்சியில் உத்திரவு வழங்கப் பெற்று பாக்தாது திரு நகர் ஏவினார்கள். சுல்தானுல் ஹிந்து – ஹிந்துஸ்தானத்தில் வலிமார்களின் வேந்தர் ஹாஜா அஜ்மீர் நாயகத்திற்கு அனைத்தையும் விளக்கிய எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை இப்படி பார்க்கிறார்கள்.

ஆதி மனிதர் ஆதம் நபியின் சொந்த பூமியிலே இறைவன் ஏக ஞானமான பெருமான் நபிகள் கோமான் மார்க்கத்தின் பேரொளி பிரகாசத்தை எடுத்துச் செல்லும் சுல்தானுல் ஹிந்து ஹாஜாவே! நீர் ஹிந்துஸ்தானத்தில் வலிமார்களின் பாதுஷாவாக ஆன்மீக அஜ்மீர் கோட்டையில் வீற்றிருக்கும் தருவாயில், இந்தியாவின் தெற்கு பூமியான திராவிட ஸ்தானத்திலே ஒருவர் வந்துதிப்பார். இந்துஸ்தானத்தின் ஆன்மீக பரிபாலத்திலே அவர் உமக்கு துணையாய் இருப்பார். கிழக்காசிய நாடுகளின் பரிபாலனமும் அவரிடம் ஒப்படைக்கப்படும். மேலும் அவர் ஆதி நபி ஆதம் நபி அவர்கள் இறக்கப்பட்ட பூமியில் இருப்பதால் அவரிடம் இஸ்லாதின் ஞானப் பாதைகள் அனைத்தும் சென்று சங்கமிக்கும்.

அவர் வெளிப்படையான அற்புதங்களை நிகழ்த்துவோரில் குதுபாக இருப்பார். உம்மீது நாம் கொண்ட நேசத்திற்காக எமது இரு மைந்தர்களின் நேர் வாரிசுகளான ஹஸன், ஹுஸைனின், சந்ததிகளிலே தோன்றச் செய்து, இறைவன் உமக்கு அவரை துணையாக்குவான்.

ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி அவர்கள் மன நெகிழ்வோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். அறிவிப்பு தொடர்ந்து கொண்டிருந்தது...

அவர் பெயர் தான் சையத் அப்துல் காதர் ஷாஹுல் ஹமீது மாணிக்கப்பூரி. அவர் தங்குமிடம் ஹிந்துஸ்தானத்தின் தென்கோடியில் உள்ள நாகூர் ஆகும்.

அந்த அன்பு துணையின் ஆன்மாவை ஹஜ்ரத் முயீனுத்தீன் அவர்களின் ஆன்மா ஸ்பரீஸிக்க முனைந்தது. அல்லாஹ் அவர்களுக்கு அதை காட்டிக் கொடுத்தான்.

நூலுக்கு நன்றி : குத்புல் இர்ஷாத் மாபெரும் ஜோதி ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி.

ஆம்...! தமிழகத்து பாதுஷாவாம் காதர் வலி காதிரி கன்ஜே ஸவாயீ கன்ஜ் பக்ஷ் நாகூரி ஆண்டகை அவர்களின் பிறப்பிற்கு சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பே அஜ்மீர் நாயகத்திற்கு அல்லாஹ் காட்டிக் கொடுத்திருக்கிறான் என்கிற போது...

வலிமார்களின் திருச்சமூகத்தில் நமது நாகூர் நாயகத்தின் திருப்புகழைக் கூற வேறு சான்றுகள் தேவையா...?

எஜமானின் இப்புனிதமிகு 454வது உரூஸ் கந்தூரி பெருவிழாவிலே தர்கா இதழ் தமது உவகையான கரங்களை ஏந்தி குணங்குடி மஸ்தான் வலியுல்லாஹ் கூற்றுப்படி...

.... திக்குத் திகழ்மும் கொண்டாடியே வந்துதீன் கேட்டு நிற்பர் கோடி என்ற வாக்கிற்கேற்றபடி கோடியில் ஒருவராய் நாமும் வேண்டுகிறோம்.

யா அல்லாஹ்! நாகூர் ஆண்டகையின் கந்தூரி பெருவிழாவின் பொருட்டால் ஜாதிமத பேதமின்றி அரசன் முதல் ஆண்டி வரை ஏற்றத்தாழ்வு இன்றி எல்லோருக்கும் எல்லாமும் வழங்குவாயாக.

ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்! பிஜாஹே சையிதுல் முர்ஸலீன்!!நாகூராரின் நேர்வழி நடப்போம்! ஈடேற்றம் பெறுவோம்!!

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

# தர்கா இதழ் நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு மழை...!

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் நமது சின்னஞ்சிறிய தர்கா இதழ் கட்டுரைப் போட்டிக் கான தலைப்புகளை அறிவித்துவிட்டு யார் எழுதப்போகிறார்கள் என்றெண் ணி நாம் இருந்து விட்டோம். ஆனால் நாமே திகைக்கும் அளவிற்கு சுமார் 35 கட்டுரைகள் நமது அலுவலகத்திற்கு வந்த போது திக்குமுக்காடித்தான் போனோம். அதிலும் குறிப்பாக மதரஸா மாணவ மாணவிகள் அதிகம் பேர் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. ஏனெனில் மதரஸாக்களின் வாயிலாகத்தான் வஹ்ஹாபியத் கோரத்தாண்டவம் ஆடியது என்று கூறினால் மிகையல்ல. சலஃபிகளும், தவ்ஹீத்வாதிகளும் வஹ்ஹாபிய கூப்பாடு போடுவது நமக்கு ஆச்சரியமில்லை. அவர்க ளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போர் வையில் செயல்படும் தப்லீக்வாதி களும் சில தரீகாவாதிகளும் தங்களைத் தாங்களே சுன்னத் வல் ஜமாஅத் என்று கூறிக்கொண்டு தவ்ஹீத்வாதிகளின் அதே நச்சுக் கொள்கைகளை, இன்னும் கூறினால்... அதைவிட நபிகளாரை தரக்குறைவாக கூறிய தேவ்பந்தின் அஷ்ரப் அலி தானவி, ரஷீத் அகமத் கங்கோஹி போன்றோரை சுன்னத் வல் ஜமாஅத்தினராக காட்டிக் கொள்ள வேஷம் கட்டிக் கொண்டு திரும்பத்திரும்ப அல்லாஹ் ரஸூலின் பேரில் தவறான வஹ்ஹாபிய விஷவித்துக்களை எழுதுகிறார்களே என்பது தான் நம் ஆதங்கம். எனவே மதரஸாக்களின் மூலமாக கட்டுரைகள் வந்ததை தர்கா இதழ் வரவேற்று மகிழ்கிறது. மதரஸா மாணவ மாணவியர்கள் எழுதிய அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தன. இவர்களுக்கு இணையாக நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்ற ரீதியில் அவாமுன்னாஸ் ஆகிய பொது மக்களும் அல்லாஹ் ரஸூல், அவுலியாக்கள் மீது கொண்ட பற்றின் காரணமாக சிறப்பாகவே எழுதியிருந் தார்கள். பரிசுக் கட்டுரையை தேர்வு செய்யும் உலமாக்கள் குழு சற்று திணறித்தான் போனது. அதிலும் குறிப்பாக மூன்றாம் பரிசுக்கு உரிய கட்டுரையாக எதை அறிவிப்பது என்று உலமாக்கள் குழுவில் சிறு விவாதமே ஏற்பட்டது. இதனால் இரண்டு கட்டுரைகள் மூன்றாம் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. கட்டுரை எழுதிய அனைவருமே பாராட்டிற்கு உரியவர்கள்.

**பரிசு பெற்றவர்கள் விபரம்...**

**முதலாம் பரிசு** – S.ஹமீதா பானு B.Com., ஹஸனதுல் அப்ரார் மகளீர் அரபிக் கல்லூரி - சென்னை.

**இரண்டாம் பரிசு** – ஹாபிஸ் முஹம்மத் அலீ தாருல் உலூம் கௌஸியா அரபிக் கல்லூரி - தஞ்சாவூர்.

**மூன்றாம் பரிசு** I – S.உமர் கைய்யாம் மதரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் - திருச்சி.

**மூன்றாம் பரிசு** II – K.முஹ்யித்தீன் ஃபாத்திமா கதீஜா - மதுரை.

**ஆறுதல் பரிசு பெற்ற திருப்பூர் சிராஜுல் முனீர் அரபிக் கல்லூரி மதரஸா மாணவர்கள் :**

*1.*F.அஜ்மீர் கான், *2.*R.அப்துல் அஜீஸ், *3.*N.முஹம்மத் இஸ்மாயீல்(பழனி), *4.*M.H.அப்துல் ஸமத், *5.*A.முஹம்மத் அஷ்ரப் மன்சூர், *6.*A.தாஜ், *7.*A.M.ஹஸன் யாஸீன், *8.*A.முஹம்மத் ஷரீஃப், *9.*I.நௌஷாத் அலீ, *10.*முஹம்மத் அப்சல், *11.*S.முஹம்மத் நிஸார்,

**ஆறுதல் பரிசு பெற்ற மதரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் மாணவர்கள் :**

*1.*S.அப்துல் மஜீத். *2.* முஹம்மத் நௌஷாத் அலீ. *3.* முஹம்மத் இப்ராஹீம்.

**ஆறுதல் பரிசு பெற்ற மர்கஸ் தஜ்கியதுஸ் ஸுன்னியா - பாடந்துறை மாணவர் :** *1.* I.இம்ரான்.

**ஆறுதல் பரிசு பெற்ற ஹஸனதுல் அப்ரார் மகளீர் அரபிக் கல்லூரி மாணவிகள் :**

*1.*M.ஆயிஷா பேகம், *2.*T.சையத் அலீ ஃபாத்திமா B.Sc., *3.*கல்வத் நிஸா, *4.*M.ரிழ்வானா பேகம், *5.*அ.அஸ்ம துன்னிசா B.Sc., *6.* K.பெனாசிர், *7.*C.ரேஷ்மா, *8.*K.ருகைய்யா, *9.*M.ஷரீன் பானு.

**ஆறுதல் பரிசு பெற்ற ஏனையோர் :**

*1.*M.சையத் அப்துல் காதர் - சென்னை, *2.*I.அப்துர் ரஜ்ஜாக் சூஃபி-தஞ்சை, *3.*A.ஷேக் தாவூத் நாச்சியார். *4.* சித்தி ஜன்னதுல் ஃபரீனா, *5.*ஷஹனாஸ் -கடலூர், *6.*S.பீர் முஹம்மத் - பொள்ளாச்சி.

**உருது மொழியில் கட்டுரை...**

உருது மொழியில் கட்டுரை சமர்பிக்க நாம் வெளியிட்ட அறிவிப்பை தொடர்ந்து தஞ்சையைச் சேர்ந்த ஹாபிஸ் முஹம்மத் ருஸ்தம் அலீ ஹஜ்ரத் அவர்கள் சஹாபியத் தோழர்கள் நபிகள் கோமானை நேசித்த முறை என்ற தலைப்பில் சிறப்பா கட்டுரை வரைந்திருந்தார்கள். அவர்களுக்கும் மற்ற அனைவர்களுக்கும் தர்கா இதழ் குழுமம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

கட்டுரை போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தகுந்த சன்மானமும், பரிசு நூல்களும், சான்றிதழும் நிர்ணயம் செய்யப் பட்டு, *13.04.2011* அன்று தஞ்சை சாஹெப் உரூஸுக்கு வருகை புரிந்திருந்த மதரஸதுல் ஹஸனைன் ஃபீஜாமிஆ யாஸீன் மாணவர்களுக்கு நேரடியாகவும், வருகை தராத மற்றனைவருக்க தகுந்த நபர்கள் மூலம் பரிசுகள் அனுப்பிவைக்கப்பட்டன.

கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த முஹ்யித்தீன் அடிமை அவர்களுக்கு அவர்களின் சேவையை பாராட்டி பொற்கிழியும், நினைவு பரிசும் உரூஸ் விழா மேடையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## அஜ்மீர் தர்காவில் சூரிய ஆற்றல் மின்சாரம் ராஜஸ்தான் மாநில அரசின் முன்னோடித் திட்டம்



ராஜஸ்தான் மாநிலத்தில் அபரிதமாகக் கிடைக்கும் சூரிய ஆற்றலை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள மாநில அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே அஜ்மீரில் உள்ள ஹஜ்ரத் ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தி தர்காவில் இதற்கான சூரிய ஒளிப் பலகைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தர்காவில் 20 கிலோ வாட் சூரிய ஆற்றல் மின் உற்பத்தி பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் சூரியன் மறைந்த பிறகு 6 மணி நேரத்திற்கு தர்காவில் உள்ள மின் விளக்குகள் செயல்படுகின்றன. அத்துடன் இங்கு வரும் பக்தர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் 500 லிட்டர் மற்றும் 1500 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாட்டர் ஹூட்டர்களும் நிறுவப்பட்டுள்ளன. முன்னர் வென்னீருக்கு மின்சார ஹீட்டர்கள் பயன்படுத்தப்பட்டன. சில சமயங்களில் மரக்கட்டைகள் பயன் படுத்தப்பட்டன. ஆனால் இப்போது சூரிய ஆற்றல் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது என்பதாக மரபு சாரா எரிசக்தித் துறை நிறுவன அதிகாரி ஆர்.ஆர்.சவுதிரி அவர்கள் தெரிவித்தார்.

***நன்றி ; தினமணி 29.04.2011 சென்னை பதிப்பு.***

**அனல் வாஹிதுல் ஃபர்துல் கபீரு ஃபீ ஜாத்திஹி!**

**ஆன்மிகப் பேரரசர் - ஆருயிர் இரட்சகர் அகமியக் காவலர் - விலாயத் வேந்தர் -**

**மெய்ஞான ராஜ மகுட தவராஜ ராஜர் -**

# முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களின் மகத்தான வாய்மை வரலாறு...!

**முழுமையான நெடுந்தொடர் - ஆக்கம் முஹ்யித்தீன் அடிமை**

## இறைஞ்சுதல் !

மூலமே முதலே முழு முதற் பொருளே
முஹ்யத்தீன் பேரொளி அரசே
இவண் வருகவே!
மூலமே முதலே முழு முதற் பொருளே
முஹ்யித்தீன் எங்கள் ஏகநாயகனே
அருள் மழை பொழிகவே!!
மூலமே முதலே முழு முதற் பொருளே
முஹ்யித்தீன் எங்கள் மெய் ஞானத் தந்தையே
தங்கள் பொற் கமலப் பாதார விந்தத்தின்
பேரின்பப் பெரு நிழலில்
நாங்கள் உரைகவே!!!

**பூமான் முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் பொற்கமலப் பாதாரவிந்தம் போற்றி !**

ஆதி இறை போற்றி
அண்ணல் நபி போற்றி
சோதிமணி முஹ்யித்தீன்
சுடர் கழல்கள் போற்றி போற்றி!

ஓதியுணர் நெஞ்சமெல்லாம்
உறைகின்ற கருப் பொருளாய்
ஒளிர்கின்ற முஹ்யித்தீன்
உயர் கழல்கள் போற்றி போற்றி!

முன்னை நாள் முஹம்மதாராய்
பின்னை நாள் முஹ்யித்தீனாய்
பிறப்புற்றப் பேரொளியே - எஞ்ஞான்றும்
இறப்பில்லா எந்தையே போற்றி போற்றி!

கன்னல் அமுதே சீனி கற்கண்டே
தேன்பாகே தெள்ளமுதே தீஞ்சுவையே தீன் உயிரே
இன்னமுத இன்பமே இன்பத்துள் இன்பமே
எங்கள் உயிர் முஹ்யித்தீனே போற்றி போற்றி!

மாதவத்தோர் தொழுதேத்தும்
மாதவனே, ஆதவனே, மா மணியே
மங்களத்தின் சங்கமமே, மாநிதியே
பொங்கும் மெய் ஆன்மிகப் பேருணர்வே
தங்கம் நிகர் தவநெறிகள் அத்தனைக்கும்
தலைமை என அரசாளும் பெருமானே!

எங்கெங்கும் நிறைந்தொளிரும்
ஏகத்துவப் பேரொளியே போற்றி போற்றி
எங்கள் உயிர் முஹ்யித்தீனே போற்றி போற்றி!
எங்கள் உயிர் முஹ்யித்தீனே போற்றி போற்றி!!
எங்கள் உயிர் முஹ்யித்தீனே போற்றி போற்றி!!!

## ஆதி நிலை!

இருளும் ஒளியும் இல்லா
ஏகாந்தப் பெருவெளியில்
எந்த ஒன்றும் இல்லாத
ஈடற்ற முதல் நிலையில்
இணை துணையே இல்லாத
இரண்டற்ற தனிநிலையில்
ஆதிக்கும் ஆதியான
"அஹையான்" எனும் நிலையில்
தன்னையே தான் பார்க்க
நினைத்தது அந்தமுதல் மூலம்
தன்னிலே தான் ஆக
தான் அன்றி எதுவும் இன்றி
தான் என்ற தனது என்ற
தணியாத வேட்கையுடன்
தன்னையே தான் பார்த்து
தன் ஒளியால் வெளிப்பட்டது
பல்லாயிரம் கோடி கோடி
பரிபூரணம் அவ்வொளியே
நூறாயிரம் கோடி சூரியனும் சந்திரனும்
நுனிப்புல்லே அவ்வொளியின் முன்னாலே
அவ்வொளியின் திருமுகமே
நூரே முஹம்மதிய்யா
அம்முகத்தின் அருள் ஒளியே
முஹ்யித்தீன் என்பதாகும்!

## குணங்குடியில் முஹ்யித்தீன் மாளிகை அடிக்கல் விழா...!

இஸ்லாமிய ஆன்மீக உலகில் வலிமார்களின் தலைமை பீடமாகத் திகழும் எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகையை அறியாதோர் இலர். தமிழகத்தைப் பொறுத்தவரை பண்நெடுங்காலமாக முஹ்யித்தீன் ஆண்டகையின் தைக்கால்களும், தைக்கால்களில் கொடியேற்றங்களும், ராத்திபு மஜ்லிஸ்களும், நேர்ச்சைகளும், 11ஆம் ஃபாத்திஹாக்களும், ஜமா அல்லாஹ் ஃபக்கீர்மார்களின் ராத்திபுகளும், எஜமானின் பேரிலே நடந்து வருகின்றன என்றாலும் தமிழ் இலக்கிய உலகில் எஜமானின் சிறப்புகளை மேன்மைகளை பாக்களாக, செய்யுள்களாக, காவியங்களாக எதுகை மோனையோடு அல்லாஹ், முஹ்ம்மத், முஹ்யித்தீன் என்ற வஸீலாவின் நேர்கோட்டில் மக்களிடம் எடுத்துச் சொன்ன தமிழகத்தின் தலைமை மெய்ஞானப் புலவராக எஜமானின் அடிமைகளுக்கெல்லாம் அடிமைகளின் திலகமாக திகழ்ந்தவர் குணங்குடி மஸ்தான் அப்பா என்றால் மிகையாகது. அவர் பிறந்த சீர்மிகு குணங்குடியிலே கீர்த்திமிகு தைக்கால் அவர் பிறந்த இடத்திலேயே அந்த சின்னஞ்சிறு ஊரில் நிர்மாணிக் கப்பட வேண்டும் என்ற நல்ல முயற்ச்சியின் துவக்கமாக சங்கை மிகு ஷைகுல் மஷாயிகு ஆலே ரஸூல் அவுலாதே கௌஸூல் அஃளம் ஷாஹ் சையத் சர்கார் ஹஸனி வல் ஹுஸைனி காதிரி புகாரி சிஷ்தி ஷாதுலி மத்த லில்லஹூன் நூரானி (கோவளம்) அவர்களின் தலைமையில் சீர்மிகு விழா தமிழகம் முழுக்க சுற்றிச் சுழன்று, சர்வசதா காலமும் எஜமான் முஹ்யித்தீனின் புகழ்பாடும் ஷாஹூல் ஹமீது காதிரி முஹ்யித்தீன் அடிமை அவர்கள் முன்னிலை வகித்து குணங்குடி மஸ்தான் சாஹிபு அப்பா அவர்கள் இயற்றிய முஹ்யித்தீன் குருவணக்கம் பாராயணம் செய்ய ஆலிம்களின் பயான்கள் நடைபெற கோவளம் சர்கார் அவர்கள் அரபி புகழ் மாலை ஓதி கொடியேற்றி வைக்க , ஃபாத்திஹா ஓதி அன்னதான நேர்ச்சை வழங்கி முஹ்யித்தீன் மாளிகை தைக்கால் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.

இம்மாபெரும் விழாவில் ஊரின் முக்கியஸ்தர்களும், ஜமாஅத்தார்களும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். இராமநாதபுரம் முஹ்யித்தீன் நேசர் ஜனாப் அப்துல் காதிர் அவர்கள் தன் உடல் நிலை குன்றிய நிலையிலும் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக ஜனாப் பிலால் முஹ்யித்தீன் அவர்கள் மூலம் செய்திருந்தார்கள்.

**செய்தி விளக்கம் : ஜனாப் மௌலான மௌலவி அப்துல் ரஜ்ஜாக் ஸூஃபி, ஜனாப் முஹ்ம்மத் உஸ்மான் மோத்தி-மதுரை (இந்த புனித மிகு விழாவிற்காக எல்லா முயற்சிகளையும் செய்த அத்தனை நபர்களுக்கும் தர்கா இதழ் குழும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறது - ஆ-ர்)**

# வலிமார்கள் பேசுகிறார்கள்...

## முஃபஸ்ஸிருல் குர்ஆன் இமாம் நாஸிரி அவர்கள் மரணத்திலிருந்து மீண்டு வந்த சம்பவம்...!

### (மஹ்பூபே இலாஹி நிஜாமுத்தீன் அவ்லியா அவர்களின் ரிவாயத்துப் படி...)

எனது ஷைகும் முர்ஷிதுமாகிய டில்லி வலிமார்களின் அரசராம் எஜமானார் சையத் நிஜாமுத்தீன் அவ்லியா மஹ்பூபே இலாஹி அவர்களின் திரு சன்னிதானத்தில் 710ஆம் ஹிஜ்ரி ஆண்டு துல்காயிதா மாதம், பிறை 7க்கு அவர்களின் திருப்பாதத்தை முத்தமிடும் பாக்கியம் பெற்றேன். இமாம் நாஸிரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் குர்ஆன் விரிவுரையான தஃப்ஸீர் நாஸிரி என்ற கிரந்தம் எஜமானின் கையில் இருந்தது. அதை விளக்கும் வண்ணம் எஜமான் இமாம் நாஸிரி அவர்களைப் பற்றி கூறினார்கள்.

ஒரு முறை இமாம் நாஸிரி அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக (கோமா நிலைக்கு) சென்று விட்டார்கள். உறவினர்களும், உடன் இருந்தோர்களும், இமாம் அவர்கள் மரணித்துவிட்டதாக கருதி குளிப்பாட்டி கபனிட்டு அடக்கம் செய்து விட்டார்கள். நல்லடக்கம் நடத்தியபின் இரவு நேரத்தில் உடல் ஆரோக்கியம் பெற்று தாம் அடக்கம் செய்யப்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். இச்சூழலில் இமாம் அவர்களுக்கு பெருமானாரின் ஓர் ஹதீஸ் நினைவுக்கு வருகிறது. அதாவது இது போன்ற இருட்டு வேளையில் நாற்பது யாஸீன்கள் ஓதப்படுமாயின் பேரொளி பிரகாசம் ஏற்பட்டு வழி திறக்கும் என்ற ஹதீஸ் நினைவுக்கு வரவே அதே க்ஷணத்தில் யாஸீன் ஓதினார்கள். 39 விடுத்தம் யாஸீன் ஓதி முடிக்கும் தறுவாயில் கப்ரில் மூடியிருந்த மண் விலகும் அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன. கஃபன் துணியை திருடும் ஒருவன் கபரை தோண்டிக் கொண்டிருந்தான். இதைக் கண்ட இமாம் அவர்கள் 40வது யாஸீனை மெதுவாக மனதில் ஓதினார்கள். காரணம் முழு கபரும் திறக்கப்பட்டு தாம் வெளி வரவேண்டும் என்ற நோக்கத்துடனும் திருடன் பாதியில் சென்று விடக் கூடாது என்று அவ்வாறு ஓதினார்கள்.

நாற்பதாவது யாஸீன் முழுமையாக ஓதி முடித்தப்பின் திருடனும் முழு கபரையும் திறந்துவிட்டதால் இமாம் அவர்கள் கபரை விட்டு வெளியே எழுந்தார்கள். இதைக் கண்ட திருடன் அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டான். அத்திருடன் செல்லும் வரை அமைதியாக இருந்திருந்தால் அவனுக்கு இப்படி ஆகியிருக்காதே என்று இமாம் அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள்.

விடியும் வரை காத்திருந்த இமாம் அவர்கள் ஊரின் எல்லையில் நின்று யாஸீனுடைய அமலால் தனக்கு நேர்ந்த அனுபவத்தை ஊர் மக்கள் அனைவருக்கும் உரக்க கூறிய பின்னரே தன் வீட்டிற்குச் சென்றார்கள். என எனது எஜமானார் மஹ்பூபே இலாஹி நிஜாமுத்தீன் அவுலியா அவர்கள் கூறினார்கள்.

இந்த அனுபவத்திற்குப் பின்னால் தான் இமாம் நாஸிரி அவர்கள் தஃப்ஸீரை எழுதினார்கள். இந்த சம்பவத்தின் மூலம் நமக்கு தெரியவருவது என்னவென்றால்...

1. அனைத்துவிதமான ஷரீஅத் சட்டப்படி அடக்கம் செய்யப்பட்ட இமாம் அவர்களுக்கு நபிகளாரின் ஹதீஸ் நினைவிற்கு வந்து அதை அமல் செய்து கபரை விட்டு வெளியே வந்தது ஆச்சரியமிக்கதே.

2. முன்கர் நக்கீர் போன்ற மலக்குகளின் கேள்வி கணக்கு போன்ற நிலைகளைக் கண்கூடாகக் கண்ட இமாம் அவர்கள் மறைவான விஷயங்களைக் கண்டு அனுபவித்தப்பின்னரே குர்ஆனுக்கு தஃப்ஸீர் என்னும் விரிவுரை எழுதினார்கள். இது போன்ற மஹான்களின் தஃப்ஸீர்களே நமக்கு நேர்வழி காட்டும் நட்சத்திரங்கள். ஆனால் இந்த வழிகெட்ட வஹ்ஹாபிகள் இவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டு தான்தோன்றித்தனமாக வலிமார்களை விமர்சனம் செய்து நமது ஈமானைக் கெடுக்க துடிக்கிறார்கள். எனவே முஃமின்களே வலிமார்களின் வழி நடந்து வழிகெட்ட வஹ்ஹாபிகளை புறந்தள்ள வேண்டுகிறோம்.

**ஆதாரம் : ஃபவாயிதுல் ஃபுஆத் - பாரஸீக நூல் ; பக் : 102 உருது மொழியாக்க நூல் : பக் : 341**

## நபிகள் கோமானை கனவில் தரிசிக்க தக்வாவும் தகுதியும் வேண்டும்

ஹிஜ்ரி 713 ஆம் ஆண்டு ரஜப் பிறை 14 ஞாயிற்றுக் கிழமை எனது மெய்ஞான குருநாதரான மஹ்பூபே இலாஹி நிஜாமுத்தீன் அவுலியா அவர்களின் பொற்பாதங்களை முத்தமிடும் பாக்கியம் பெற்றேன். அவ்வேளையில் ஷரீஅத் தரீகத்து பற்றிய செய்திகளை அமர்ந்திருந்தவர்கள் முன்னிலையில் எஜமான் அவர்கள் விளக்கிக் கொண்டிருந்தார்கள். அதன் தொடராக எஜமானின் தாதா பீரான காஜா குத்புத்தீன் பக்தியாரே காக்கி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் முரீது கண்ட கனவைப் பற்றி விளக்கம் கூறினார்கள்.

“ஷைகு ரயீஸ் என்பவர் குத்புத்தீன் பக்தியாரே காக்கி அவர்களிடம் பைஅத் பெற்ற முரீதாக இருந்தார். இபாதத்து வணக்க வழிபாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த ரயீஸ் அவர்களுக்கு பெருமானார் அவர்களை கனவில் ஜியாரத்து செய்ய வேண்டும் என ஆவல் மேலிட்டவராக இருந்தார். ஒரு நாள் அவர்கள் கனவு கண்டார்கள். அக்கனவில் கும்பதே கஜ்ரா எனும் மதீனாவின் பச்சை கோபுரத்தைக் கண்டார்கள். அதைச் சுற்றி பெரும் திரளாக மக்கள் குழுமியிருந்தார்கள். சிறு உருவம் கொண்ட ஒருவர் அடிக்கடி அந்த குப்பாவிற்குள் சென்று வெளியே நின்று கொண்டிருந்தவர்களுக்கு ஏதோ பதில் கூறினார். பலரும் இவ்வாறு பதில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட ரயீஸ் ஆகிய நான் அருகில் இருந்த ஒருவரிடம் அந்த புனித குப்பாவிற்குள் இருப்பது யார்? இந்த சிறிய உருவம் கொண்ட இந்த மனிதர் யார் என்று கேட்டேன்.

அந்த புனித குப்பாவிற்குள் இருப்பது எம்பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள். இந்த சிறிய உருவம் கொண்டவர் ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு ஆவார்கள் என்று பதிலளித்தார். இவர் பெருமானரிடம் சென்று செய்தி கேட்பவர்களுக்கு பதில் கேட்டுச் சொல்கிறார் என்றும் கூறினார்.

இதைக் கேட்டவுடன் நான் ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அவர்களிடம் சென்று மிகப் பணிவாக எனது ஸலாத்தைக் கூறினேன். பிறகு

பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு எனது ஸலாத்தையும் ஸலாமையும் எத்திவையுங்கள். நான் அவர்களை தரிசிக்க ஆவல் கொண்டுள்ளேன். அனுமதி பெற்று வாருங்கள் என்றேன்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உள்ளே சென்று திரும்ப வந்து என்னிடம் இவ்வாறு கூறினார்கள். ஓ ரயீஸே நபிகளாரைக் காணும் தகுதியை இன்னும் நீர் பெறவில்லை. ஆனால் நீர் உமது ஷைகு பக்தியாரே காக்கி அவர்களிடம் சென்று இந்த செய்தியைக் கூறும். உமது ஷைகு அவர்கள் இரவில் ஓதும் ஸலவாத்துக்கள் எம்மை வந்து அடைந்து கொண்டிருந்தது. ஆனால் மூன்று இரவுகளாக எனக்கு எந்த ஸலவாத்தும் வந்து சேரவில்லை. இன்னும் உடல் நலம் விசாரித்ததாகக் கூறவும் என நபிகளார் கூறினார்கள் .

திடுக்கிட்டு எழுந்த நான் நேராக எனது ஷைகு நாயம் பக்தியாரே காக்கி அவர்களின் திருச்சமூகத்தை அடைந்து எஜமானே! எம்பெருமான் நபிகள் நாயகம் அவர்கள் தங்களுக்கு ஸலாம் கூறினார்கள் என்று கூறிய மாத்திரத்திலேயே எனது ஷைகு அவர்கள் எழுந்து நின்றுவிட்டார்கள். ரஸூல் அவர்கள் எனக்கு என்ன கட்டளையிட்டார்கள் என்று மிகப் பணிவோடு கேட்டார்கள். எஜமானே! தாங்கள் தினமும் ஓதும் தரூதும் ஸலவாத்தும் கடந்த மூன்று நாட்களாக அவர்களின் திருச் சமூகம் அடையவில்லை என்று கூறினார்கள். தங்களின் உடல் நலத்தையும் விசாரித்தார்கள். உடனே எஜமான் அவர்கள் திருமணமாகி மூன்றே நாட்கள் ஆன தன் துணைவியாரை அழைத்து மஹர் தொகையைக் கொடுத்து பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஸலவாத்தை ஓத இந்த மணவாழ்வு எனக்கு தடையாக இருப்பதால் உம்மை தலாக் சொல்லி விடுதலை செய்கிறேன் எனக் கூறி அனுப்பி விட்டார்கள். அன்றிலிருந்து ஒவ்வொரு இரவும் மூன்றாயிரம் விடுத்தம் தரூதும், ஸலவாத்தும் பெருமானாரின் திருச் சன்னிதானத்தில் அனுப்பும் வழமையை கடைபிடித்து வந்தார்கள் என்பதாக எனது ஷைகு மஹ்பூபே இலாஹி அவர்கள் கனவின் பலாபலன்களை விளக்கிப் பேசினார்கள்.

**ஆதாரம் : ஃபவாயிதுல் ஃபுஆத் : பாரஸீக நூல்;பக்:185 உருது நூல்:507**

இச்சம்பவம் மூலமாக உண்மையான கனவுகள் நற்பயனை அளிக்கின்றன என்பது தெளிவாகிறது.

தரூதும், ஸலவாத்தும் பெருமானாரின் திருச் சமூகத்தில் திடமாக சென்றடைகின்றன என்பதும் தெளிவாகிறது.

நபிகளாரை காணுவதற்கும், கனவில் ஜியாரத்து செய்வதற்கும் தகுதியும், தக்வாவும் வேண்டும் என்பதும் புலனாகிறது.

# குழப்பங்கள், அனாச்சாரங்கள் நிறைந்திருக்கும் போது ஜியாரத் செய்வது ஆகுமா?

குழப்பங்கள், அனாச்சாரங்கள் நிறைந்திருந்தால் அவைகளை ஜியாரத் செல்லுபவர்கள் முடிந்தால் கையால் தடுக்க வேண்டும். இல்லாவிடின் நாவால் தடுக்க வேண்டும். இதுவும் முடியா விட்டால் மனதால் வெறுக்க வேண்டும்.

இது அல்லாமல் ஜியாரத் ஆகாது என்று சொல்வது மடத்தனமாகும். கெட்டவைகள் இருப்பதினால் நன்மையான சுன்னத்தை தடுக்கவோ, விடவோ துடியாது. சங்கைமிகு இமாம்களின் தீர்ப்புகளைப் பாருங்கள்.

அவ்லியாக்களின் கப்றுகளை அவர்களது பிறப்பு (இறப்பு - கந்தூரி) தினங்களில் பெண்கள் ஆண்களுடன் கலந்திருப்பது போன்று மற்றுமுள்ள அதிகமான குழப்பங்கள் (அனாச்சாரங்கள்) அங்கு அதிகமாக நடக்கும் போது ஜியாரத் செய்வது ஆகும். இல்லை சுன்னத்தாகும். இமாம் ஷைகு இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது பதாவா குப்ராவில் (பாகம்;2, பக்கம்;24) சொன்னதின் குறிப்பு இதோ:-

**கேள்வி:** குறிப்பிட்ட காலத்தில் (கந்தூரி தினத்தில்) அதற்கென்று பிரயாணம் செய்து அவ்லியாக்களின் கப்றுகளை ஜியாரத் செய்வது, அங்கு பெண்கள் ஆண்களுடன் கலந்திருப்பது, அதிகமான விளக்குகள் ஏற்றுவது போன்றுஅதிகமான குழப்பங்கள் சேர்ந்திருக்கும் போது ஆகுமா?

**பதில் :** அவ்லியாக்களின் கப்றுகளை ஜியாரத் செய்வது விரும்பத்தக்க வழிபாடாகும். அதற்காக பிரயாணம் செய்வதும் அப்படியே (விரும்பத்தக்க வழிபாடாகும்) பித்அத்துகள், ஹராம்கள் இருப்பதற்காக நல்வழிப்பாடுகளை விட முடியாது. மனிதர்கள் அவைகளை செய்ய வேண்டும். பித்அத்துக்களை மறுக்க வேண்டும். முடிந்தால் நீக்கவும் வேண்டும். சுன்னத்தான ஸவாபு (கஃபத்துல்லாவை வலம்சுற்றுவது) வாஜிபான தவாபைக்கூட புகஹாக்கள் மார்க்க அறிஞர்கள் பெண்கள் இருக்கும் போதும் செய்ய வேண்டும் என்றே சொல்லியிருக் கிறார்கள். எங்கிலும் பெண்களை விட்டும் தூரமாக செய்ய வேண்டுமென்றே சொல்லியிருக்கி றார்கள். அதைப் போன்றே இதுவும் (ஜியாரத் செய்வதும்)

பெண்கள் கலந்திருக்கிறார்கள் என்ற பயத்தினால் ஜியாரத்தை தடுக்க வேண்டுமென்றால் தவாஃப் செய்வது, ரமலு- தவாபு செய்யும் போது குதித்து குதித்து செல்வது , அரபாவில் தங்குவது, முஸ்தலிபாவில் தங்குவது, கல் அடிப்பது போன்றவைகளை எல்லாம் தடுக்க வேண்டியதுவரும். இவைகளில் எதையும் எந்த இமாம்களும் தடுக்கவில்லை. பெண்கள் கலந்திருப்பதை மட்டுமே தடுத்திருக்கிறார்கள். அதை போன்றே ஜியாரத்தை தடுக்க துடியாது.

இப்பயத்தால் தடுப்பவர்களின் எதிர்ப்பைக் கண்டு எமாந்துவிட வேண்டாம். அவுலி யாக்களின் ஜியாரத்தை பித்அத், முன்னோர்களின் காலத்தில் இல்லை என்ற கூற்று மறுக்கப்பட்டதாகும்.

(பித்அத்துதான் என்று வாதத் திற்காக ஒப்புக்கொண் டாலும் எல்லா பித்அத்துகளும் தடுக்கப்படாதே பித்அத்துகளில் சுன்னத்தான இல்லை வாஜிபான கட்டாய கடமையான பித்அத்துகளும் இருக்கின்றனவே.)

***(பதாவாகலீலி பக்கம்:351)***

**(நன்றி : திப்யானுல் ஹக் ; பாகம்:1 பக் : 12,13)**



علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை



உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி கூ:பி

**அல்லாஹ்வின் அடையாளச் சின்னம் எது...?**

அல்லாஹ்வின் அடையாளச் சின்னம் எது என்ற கேள்விக்கான பதிலை நாம் உணர்ந்து கொண்டாலே ஒழிய, குர்ஆனின் பல வசனங்களை நாம் புரிந்து கொள்ள இயலாது.

குர்ஆனின் வசனத்திற்கு குர்ஆனைக் கொண்டே பொருள் தேட வேண்டும். அப்படி பொருள் கிடைக்கவில்லை எனில் பெருமானாரின் பொன் மொழியில் தேட வேண்டும். இன்னும் குர்ஆனின் விரிவுரையாளர்களாக பெருமானாரின் காலத்தில் சிறப்புற்றச் சத்திய சஹாபாக்களின் கருத்தை நாட வேண்டும். இவற்றில் எதையும் நாடாது தான்தோன்றித் தனமாக பொருள் கூற முற்பட்டால் அது அவனை நரகத்திற்கு கொண்டு செல்லும்.

குர்ஆன் எல்லோருக்கும் விளங்கும் படியாகத் தானே இறங்கியிருக்கிறது என்ற வழிகெட்ட வஹ்ஹாபியர்களின் வார்த்தை ஜாலத்தை நம்பி தகுதியில்லாதோர் பொருள் கூறத் தொடங்கினால் என்ன விளைவு என்பதை பெருமானாரின் ஹதீஸைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

யாராவது குர்ஆனுக்கு தன் சுய சிந்தனைப் படி விளக்கம் தந்தால் அது சரியாக இருந்தாலும் அவன் தவறு செய்துவிட்டான். என்றும், மற்றொரு இடத்தில்...

நரகத்தில் தன் இடத்தை தேடிக் கொள்ளட்டும்.

எனவும் எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே! அருமை வாசகர்களே! வழிகேடர்களின் இனிமையான பேச்சை நம்பி ஈமானை இழந்து விடாதீர்கள் என தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

அல்லாஹ்வின் அடையாள சின்னம் எது? என்ற கேள்வியை நாம் குர்ஆனிலே தேடினால்... அதற்கான பதில் இதோ...

ஸஃபா (என்ற மலையும்) மர்வா (என்ற மலையும்) அல்லாஹ்வின் அடையாளச் சின்னத்தில் உள்ளதாகும்.

**ஸஃபாவும், மர்வாவும் புனிதம் பெற்றது எதனால் ?**

ஸஃபா, மர்வா என்பது கஃபதுல்லாஹ் எனும் இறையில்லத்தின் அருகில் இருக்கக் கூடிய இரண்டு மலைகளின் பெயராகும். இந்த இரு மலைகளையும் இறைவன் தனது அடையாளச் சின்னம் என குறிப்பிடக் காரணம் என்ன?

உலகத்தில் எத்துனையோ பெரிய பெரிய மலைகள் இருக்க சிறு குன்றுகளான இந்த இரண்டு மலைகளின் பெயரை குர்ஆனில் கூறியதுடன் இதனை தவாஃப் செய்வது குற்றமல்ல என்றும், இரு மலைகளும் எனது அடையாளச் சின்னம் எனவும் புகழ்ந்து கூறியதன் பின்னணி என்ன?

அடையாளச் சின்னம் என்றால் என்ன? ஒரு பொருள் வேறொரு பொருளை நினைவூட்டினால் அந்த பொருளை அடையாளச் சின்னம் எனக் கூறுவோம்.

இதன்படி ஸஃபா, மர்வா என்ற இரு மலைக் குன்றுகளும் எதை நினைவுறுத்துகிறது? காலம் கடந்து பின்னோக்கி செல்லுங்கள். சையிதினா இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலத்திற்கு வாருங்கள். இந்த இரு மலைகளும் ஏன் புனிதம் பெற்றன என்பதை காண்போம்.

இறை ஆணைப்படி சையிதினா இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தன் அருமை துணைவியார் ஹாஜிரா அம்மையாரையும், பச்சிளம் பாலகரான சையிதினா இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் அழைத்துக் கொண்டு கஃபா கட்டப்படாத காலத்தில் ஸஃபா, மர்வா எனும் இந்த மலைக் குன்றுகளின் மத்தியில் தன்னந்தனியே விட்டுச் செல்கிறார்கள். இச் செயல் அல்லாஹ்வின் ஆணை என்பதை அறிந்த அன்னை ஹாஜிரா அவர்கள் கலங்கவில்லை. அல்லாஹ் எனக்கு போதுமானவன் என தனது அருமை மணாளருக்கு ஆறுதல் கூறினார்கள்.

நேரம் செல்ல செல்ல பச்சிளம் குழந்தை இஸ்மாயீல் நபியவர்கள் தாகத்தால், பசியினால் அழுத போது செய்வதறியாது திகைத்த அன்னை ஹாஜிரா அவர்கள் யாரேனும் அருகில் உள்ளார்களா அல்லது யாரேனும் கூட்டமாக வருகிறார்களா அவ்வாறு வந்தால் ஏதேனும் உதவி தேடலாம் என்ற நோக்கோடு அருகில் இருந்த ஸஃபா, மர்வா என்ற தலைக் குன்றின் மீதேறி தேடினார்கள். இங்கும் அங்குமாக ஏழு முறை மலைமீதேறிய அன்னையின் துஆவினை வல்ல இறைவன் அங்கீகரித்து ஜம்ஜம் எனும் வற்றாத ஜீவ ஊற்றை ஏற்படுத்தி தாயையும், சேயையும் தனது பேரருளால் பாதுகாத்தான்.

ஸஃபா - மர்வா எனும் மலை எதனால் புனிதம் பெற்றது என்பதை தாங்கள் யூகித்திருப்பீர்கள் என்றே எண்ணுகிறேன். ஆம்! நீங்கள் யூகித்தது உண்மைதான். அல்லாஹ்வின் நேசராக விளங்கிய அன்னை ஹாஜிரா அவர்களின் புனித பாதங்கள் அந்த மலையின் மீது பட்டதால் அவை புனித மிக்க ஸ்தலங்களாக மாறின. இன்றளவும் ஹாஜிமார்களின் கடமைகளில் ஒன்றாகவும் ஆகிவிட்டது.

**தக்வா எதன் அடிப்படையில் உருவாகிறது...?**

ஸஃபாவும், மர்வாவும் இறை நேசரான அன்னை ஹாஜிரா அலைஹிஸ் ஸலாம் அவர்களை நினைவுபடுத்துகிறது. இறை நேசர்களை நினைவுகூறுவது இறைவனை நினைவு கூறுவதாகும். எனவே தான் திருக்குர்ஆனில் அல்லாஹ் ஸஃபாவையும், மர்வாவையும் தனது அடையாளச் சின்னமாக அறிவித்தான். இந்த அடையாள சின்னங்களை கண்ணியப்படுத்துவதில் தான் இருதயத்தின் தக்வா அதாவது உள்ளத்தில் ஏற்படும் இறையச்சம் உண்டாகும் இது மட்டுமா இன்னும் குர்ஆன் தரும் ஆதாரங்களை பாருங்கள்.

**இன்ஷா அல்லாஹ் தெளிவடைவோம்.....**

## புதையல்...13 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தங்களின் தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி .

# 1848ல் வெளி வந்த ரத்து வஹ்ஹாபிய மத கண்டனை...

**(வஹ்ஹாபிய மதத்திற்கு மறுப்பு தெரிவித்து கண்டணம் செய்யும் நூல்...)**

தற்காலத்தில் புற்றீசல் போல் தோன்றியுள்ள தேவ்பந்து தப்லீக் ஜமாஅத் முதல் நவீன தவ்ஹீத் வாதிகள் வரை கண்ட கண்ட பெயர்களைத் தாங்கி வெளிவந்துக் கொண்டிருக்கும் வஹ்ஹாபிய கூட்டங்கள் அனைத்தும், அக்காலத்தே யூதர்கள், இஸ்லாத்தின் மீது களங்கம் கற்பிக்க கட்டவிழ்த்துவிட்ட கட்டுக் கதைகளை இன்று இஸ்லாமிய பெயர் தாங்கியுள்ள அத்துணை வஹ்ஹாபி ஜமாஅத்துகளும் அதே கருத்துக்களை திரும்பத் திரும்ப சுன்னத் வல் ஜமாஅத் மீது தான்தோன்றித் தனமாக சுமத்துகிறார்கள். அந்த வஹ்ஹாபிகளின் மூலவர்களான இப்னுத் தைமிய்யா, இப்னுல் கையும், அப்துல் வஹ்ஹாப் நஜதி போன்ற யூத சவூதி வஹ்ஹாபிகள் கூறிய கருத்துக்களை நவீன செய்தி ஊடகங்களின் மூலம் பரப்ப எத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது கண்கூடு.

ஆனால் சற்றேரக்குறைய தமிழகத்தில் 150 ஆண்டுகளுக்கு முன் வஹ்ஹாபிய மத சாக்கடை சரக்குகளை இஸ்லாத்தில் நுழைக்க முற்பட்ட போது அன்றைக்கே வஹ்ஹாபிகள் கூறிய விதவிதமான குழப்பங்களுக்கும், குதர்க்கங்களுக்கும் தெளிவான முறையில் பதில் தந்து வஹ்ஹாபிய மதத்தின் கோர முகத்தை கிழித்து இந்த மண்ணை விட்டு நமது சுன்னத் வல் ஜமாஅத் உலமா பெருமக்கள் விரட்டி அடித்துள்ளனர் என்ற விபரத்தை 1848ல் வெளி வந்த "**ரத்து வஹ்ஹாபிய மத கண்டனை**" என்ற நூல் வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது. அந்த நூலை இப்பகுதியில் தர்கா இதழ் தொடராக தொகுத்துத் தருகிறது.

பழங்கால தமிழ் உரைநடையில் பக்க எண்கள் கூட தமிழ் எழுத்துருவில் உள்ளதை இன்றைய நடைமுறையில் உள்ள வார்த்தைகளை அடைப்புக்குறியில் கொடுத்து வாசகர் முன் வஹ்ஹாபிய மதத்தின் விஷவித்து ஆணி வேரை வெளிக் கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலை நமக்கு வழங்கிய மர்ஹூம் மௌலானா மௌலவி கண்ணியமிகு எப்.எம். இப்ராஹீம் ரப்பானி ஹஜ்ரத் நவ்வரல்லாஹூ மர்கதஹூ அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இது ரத்து வஹ்ஹாபிய மத கண்டனை (வழி கெட்ட வஹ்ஹாபிய மதத்தாருக்கு கண்டனம்)

***சிறப்பாயிரம் (முன்னுரை)***

எல்லாப் புகழும், புகழ்ச்சியும் அல்லாஹூ சுப்ஹானஹூ தஆலாவிற்கே லாயக்காயிருக்கும் (சொந்தமாகும்) அவனுடைய வல்லமையை குறித்து எழுத வேண்டுமானால் ஏழு கடலுடைய ஜலத்தையெல்லாம் மையாக்கி துன்யாவில் (உலகத்தில்) உள்ள விருட்சகங்களையெல்லாம் கலமாக (எழுதுகோலாக) சீவி இன்சான்களும் (மனிதர்களும்) மலக்குகளும் ( வானவர்களும், ஜின்களும் கூடி எழுதினாலும் எழுத முடியாது. மேலும் அவன் தன்னுடைய வல்லமையினால் ஈரேழு லோகத்தையும் அதிலுள்ள வானம், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், சொர்க்கம், நரகம், அர்ஷூ, குர்ஸி, லௌஹூ, கலம், மற்றும் உண்டான வஸ்துக்கள் எல்லாவற்றையும் படைத்து அதற்குத் தகுந்தபடி வாழ்வு, தாழ்வு - நன்மை, தீமைகளையும் கொடுத்து சகல உயிருக்கும் ரிஸ்க்கும் (உணவும்) கொடுத்து இன்னும் அவரவர்களுடைய கல்பில் (இருதயத்தில்) உள்ள எண்ணங்களையெல்லாம் அறிந்து அவரவருக்குத் தகுந்த இன்ஸாஃபுடனே (நியாயம்) நீதி நெறி நடத்தி பாதுஷாக்களுக்கெல்லாம் பாதுஷாவாகவும் அரசாட்சி செய்யும் அல்லாஹூ சுப்ஹானஹூ தஆலாவுடைய கிருபையினாலும் அவனுடைய நூரில் நின்றும் எப்படைப்புக்கும் முன்னால் உண்டாகி பின்னர் ஆதம் அலைஹிஸ் ஸலாமின் வழியில் நின்றும் அப்துல்லாஹ்வின் நுத்பத்தில் (முதுகந்தண்டு) நின்றும், அன்னை ஆமினாவுடைய கர்ப்பத்தில் உற்பத்தியாகி மக்கமா நகரில் நபிமார்களுக்கெல்லாம் நாயகமாகவும், காத்தமுல் அன்பியா - பயகம்பராகவும் ( இறை தூதுவர்களில் இறுதியானவர்) லக்கத்திற்கு( எண்ணில்) அடங்காத அநேக காரண காட்சிகளுடனே, அல்லாஹூ சுப்ஹானஹூ தஆலாவுடைய தூதரென்னும் ரஸூலாகவும், பூமியில் பிறந்து அடர்ந்த குஃப்ரு (இறை நிராகரிப்பு) காட்டை வெட்டி நீர்தூளி செய்து (உழுது) கலிமாவெனும் வித்தை ஊன்றி பயிர் செய்து தம்முடைய தீனென்னும் மார்க்கத்தை உண்டாக்கிய முஹம்மத் நபி ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய துஆ பரக்கத்தாலும், இவர்களுடைய ஆல்கள் (குடும்பத்தார்கள்) அஸ்ஹாபுகளுடைய (நாயகத் தோழர்கள்) துஆ பரக்கத்தினாலும் அன்பியாக்கள், அவுலியாக்கள், குதுப்மார்கள், ஒலிமார்கள், மும்மீன்கள், முஸ்லிம்கள், ஆலிம்கள், உலமாக்கள், ஷைகு மஷாயிகுகள் இவர்களுடைய துஆ பரக்கத்தினாலும், கற்றுணர்ந்த கவிவாணவர்கள் முன் ஒரு இல்மும் (கல்வி) அறியாத மிஸ்கீனான தஞ்சாவூரைச் சார்ந்த...................... மீச்சா-மீரான் சாஹிப் அவர்களின் குமாரராகிய ஹக்கீம் இஸ்மாயீல் சாஹிப் என்னும் என்னால் இஸ்லாம் எனும் சுன்னத் வல் ஜமாஅத் ஆகிய நான்கு இமாம்களுடைய மத்ஹபுக்கு எதிராகிய வஹ்ஹாபிகளுடைய மார்க்கத்தின் சுவால்-ஜவாபுக்காக (கேள்வி - பதில்) சுன்னத் ஜமாஅத்தில் உள்ள உலமாக்கள் சிறிது ரத்து ரிஸாலாக்கள் (மறுப்பு நூல்கள்) செய்திருக்கிறதை பார்வையிட்டு அதிலுள்ள அரபி - பார்ஸி ஹிந்தி

பாஷையில் இருந்த சுவால்களை (கேள்விகளை) தமிழில் மொழிபெயர்த்து தீனான சுன்னத் ஜமாஅத்துக்கு உபயோகப்படும்படி இவ் வஹ்ஹாபிகளுடைய மார்க்கத்தில் அகப்பட்டு தங்களுடைய தீனையும், ஈமானையும் இழந்து போகாமல் அதில் உறுதி கொண்டிருக்கும் படிக்கும், தங்களுடைய மத்ஹபை விட்டு வேறாகாமல் இந்த புத்தகத்தை கோர்வை செய்து ரத்து வஹ்ஹாபியர் மத கண்டனை" என்று பெயர் கொடுக்கப்பட்டது.

ஆகையால் சுன்னத் ஜமாஅத்துகளாகிய நான்கு மத்ஹபில் உள்ள தீனான பேர்கள் இப்புத்தகத்தில் உள்ள பொருள்களை கல்பு (நெஞ்சம்) கொண்டு நாடி பார்வையிட்டு இதிலுள்ள பயன்களை விபரமாகத் தெரிந்து யாதொரு குறைவில்லாமல் உண்மையைக் கொண்டு நடப்பீர்களானால் உங்களுடைய ஈமானும் இஸ்லாமும் கெட்டியாகி நற்பதவியும் கிடைக்கும் படி அல்லாஹு சுப்ஹானஹு தஆலா உதவி செய்வானாகவும் ஆமீன்!

**உலமாக்களின் பெயர்களாவன**

மதராஸ் என்னும் சென்னைப் பட்டிணத்தில் இருக்கும் ஹஜ்ரத் மௌலானா மௌலவி குலாம் காதிர் சாஹிப் அவர்கள் கோர்வை செய்த ரிஸாலா (புத்தகம்) தஃப்ஹீமுல் முக்தார், தம்பீஹுல் மக்ரூர், பைஜானுல் அதீ, ஃபத்ஹுல் மக்கீ ஆகியவை.

ஹஜ்ரத் மௌலவி சையதுல் முராது சாஹிப் அவர்கள் கோர்வை செய்த ரிஸாலா சிராத்துல் ஹிதாயத்து.

ஹஜ்ரத் மௌலவி முஃப்தி முஹம்மது தாஜுத்தீன் அவர்கள் கோர்வை செய்த சிராத்துல் ஹிதாயத்து மல்ஹருல் அஜாயிபு.

ஹஜ்ரத்து மௌலானா மௌலவி ஹாஃபிஸ் சையத் அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் கோர்வை செய்த ரிஸாலாவான முர்ஸாதுல் முத்தகீன்.

இது போல் மக்கா, மதீனா, ஷாம், திமிஷ்க் இவ்விடத்தில் உள்ள உலமாக்களும் இவ்வஹ்ஹாபிகள் மார்க்கத்தைக் குறித்து ரத்து ரிஸாலாக்கள் எழுதியிருப்பதையும் பார்வையிட்டு அவைகளிலுள்ள சுவால் ஜவாபின்படிக்கும் தலீல் ஹதீதின்படிக்கும், ஃபிக்ஹு ஹிகாயத்தின்படிக்கும் பெரிய பெரிய முஹத்திஸீன்கள் கோர்வை செய்திருக்கின்ற பெரிய பெரிய கிதாபுகளின் சனதுகளைக் கொண்டு தஃப்ஸீர்களின் சனதுகளைக் கொண்டும் இப்பேர்பட்ட பெரிய பெரிய முஹத்திஸிகள் எழுதிய விவரப்படி அவைகளை எல்லாம் பார்வையிட்டு அதிலுள்ள மஅனாக்களை (அர்த்தங்களை) எல்லாம் தமிழில் மொழி பெயர்த்து வஹ்ஹாபிகளுடைய ஒவ்வொரு சவால்களுக்கும் ஒவ்வொரு பாபுகள் (பாடங்கள்) செய்து இவர்களுடைய பெருங்கேடான செயல்களும் நடத்தைகளும், சொற்களும், எண்ணங்களும் அவர்கள் கிதாபுகளிலுள்ள மாறுபாடுகளையும் தெளிவாக இதில் தெரிவிக்கிறோம்.

**கண்டனம் தொடரும்...**

---

## நூல் : அறிவுச் சுரங்கம் کتاب : مغزنِ معلومات کا ترجمہ۔ شکریہ کے ساتھ

## இஸ்லாமிய கொள்கை விளக்க கேள்வி பதில்கள்...!

**கேள்வி :** நமது அகீதாவின் (கொள்கை) இமாம்கள் எத்தனை பேர்?

**பதில் :** நமது அகீதாவை வகுத்தளித்த இமாம்கள் இரண்டு பேர். 1. ஹஜ்ரத் சையிதினா இமாம் அபூ மன்சூர் மாதுருதி ரலியல்லாஹு அன்ஹு. 2. ஹஜ்ரத் சையிதினா இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி ரலியல்லாஹு அன்ஹு. (நூல் : ரௌலதுல் பஹீயா ; பக் ; 3 , நிப்ராஸ் ; பக் : 229)

**கேள்வி :** இரண்டு இமாம்களின் நிலைபாடும் ஒன்று போல் இருந்ததா? இவர்களின் கருத்துவேறுபாடு எந்த விஷயத்தில் இருந்தது.

**பதில் :** இரண்டு இமாம்களுமே உண்மையின் மீது தான் நிலைத்திருந்தார்கள். இருவருக்கும் மத்தியில் கருத்து வேறுபாடு என்பதே அடிப்படை கொள்கையில் அல்ல. மாறாக அதிலிருந்து பிரிந்து வரக்கூடிய கிளைக்கொள்கைகளில் தான். ஷாஃபீ, ஹனஃபீக்களுக்கு மத்தியில் இருக்கக் கூடிய சிறு வேறுபாட்டைப்போல(நூல்: பஹாரே ஷரீஅத் :முதல் பாகம் : பக்; 53)

**கேள்வி :** ஒருவர் இந்த இரண்டு இமாம்களின் கொள்கையைத் தவிர வேறு கொள்கையில் இருந்தால் அவர் சுன்னத் வல் ஜமாஅத்தில் கட்டுப்பட்டவரா இல்லையா?

**பதில் :** சுன்னத் வல் ஜமாஅத்தினர் இந்த இரண்டு இமாம்களையும் தலைவராகக் கொண்டுள்ளனர். மாத்துருதியாக்கள் இமாம் அபூ மன்சூர் மாத்துருதி அவர்களையும், அஷ்அரியாக்கள் இமாம் அபுல் ஹஸன் அஷ்அரி அவர்களையும் முன்னிலைப்படுத்துவார்கள்.

எனவே இந்த இரண்டு இமாம்களின் கொள்கையைத் தவிர்த்து ஒருவன் வேறு கொள்கையைக் கொண்டிருந்தால், அக்கொள்கை குஃப்ரின் பக்கம் சாயாமல் இருந்தால் அவன் வழிகெட்டவனாவான். குஃப்ரின் பக்கம் சாய்திருந்தால் அவன் காஃபிர் ஆவான். சுன்னத் வல் ஜமாஅத்தை விட்டும் நீங்கியவனாவான். (நூல் : மத்ஹபே இஸ்லாம் ; பக் : 4)

**கேள்வி :** மார்க்கச் சட்டம் - மஸாயில்களுடைய இமாம்கள் எத்தனைப் பேர்?

**பதில் :** மஸாயில்களை வகுத்தளித்த இமாம்கள் நால்வர். 1.இமாமுல் அஃளம் ஹஜ்ரத் அபூ ஹனீஃபா ரஹிமஹுமுல்லாஹ், 2.இமாமுனா ஷாஃபியி ரஹிமஹுமுல்லாஹ், 3. இமாம் மாலிக் ரஹிமஹுமுல்லாஹ், 4. இமாம் ஹம்பலி ரஹிமஹுமுல்லாஹ் ஆகியோர் ஆவர். (நூல் : ஃபதாவாயே ரிஸ்விய்யா ; பாகம் : 3, பக் : 123)

**கேள்வி :** இந்த நான்கு இமாம்களில் ஒருவரை கட்டாயம் பின்பற்ற வேண்டுமா?

**பதில் :** ஆம்! மார்க்க சட்டங்களின்படி அமல் செய்ய வேண்டுமானால் இந்த நால்வரில் ஒருவரை கட்டாயமாக பின்பற்றியே ஆக வேண்டும். அப்படி பின்பற்றாவிட்டால் அவன் மார்க்க சட்டத்தின் படி அமல் செய்யாது தன்னிச்சையாகவே செயல்பட்ட வழிகெட்டவனாவான். இந்த நான்கு மத்ஹபைத் தவிர வேறு எந்த மத்ஹபையும் பின்பற்றக் கூடாது. இவைகளே உண்மையான மத்ஹபுகளாகும். மற்ற மத்ஹபுகள் வழிகொட்டவையாகவும், தவறானதாகவும் உள்ளன. (நூல் : தஹ்தாவி ; பாகம் : 4 ; பக் : 153) ஸாவி ; பாகம் : 3, பக் : 9



சிஹாசித்தா



# احاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

### துல் ஃபிகார் என்ற வாளின் பெருமை

ஒரு முறை நபிகளார் ஹஜ்ரத் அலீ இப்னு அபூதாலிப் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களை அழைத்து ஒரு வாளை காண்பித்து இந்த வாழ் மிகவும் பெருமைக்கு உரியது என்றும், உலகில் வேறு எவருக்கும் வழங்கப்படாதது என்றும், இதன் பெருமையை போர்களங்கள் தோறும் நீர் வெற்றி பெற்றவராக அறிந்து கொள்வீர் என்றும் கூறி சிலாகித்து வழங்கினார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜு அவர்கள் கைபர் யுத்தத்திற்குப் பிறகு அதை தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று தனது துணைவியாரான சொர்க்க லோக தலைவி அன்னை ஃபாத்திமா நாயகியிடம் அதன் பெருமைபேசி அவ்வாளை காண்பித்தார்கள். அதைக் கண்ட அன்னையவர்கள் வாளைப் பற்றி தனக்கு முன்பே தெரியும்படியான புன்முறுவல் பூத்தார்கள். அதைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஹஜ்ரத் அலீ அவர்கள் ஊடல் கொண்டவர்களாக பெருமானாரிடம் முறையிடுவேன் எனப்பகர்ந்தார்கள். அத்தோடு இல்லாமல் இந்த வாளைப் பற்றி வேறு யாரிடமாவது கூறினீர்களா? என்று கேட்டதோடு வீட்டில் நடந்த வற்றையும் எடுத்துக் இயம்பினார்கள். தம்முடன் அலீயாரையும் அழைத்து வீட்டிற்கு வந்தார்கள்.

ஓ ஃபாத்திமாவே! அப்போர் வாளைப் பற்றி உமக்கு என்ன தெரியும் என்று பெருமானார் கேட்ட போது யா ரஸூலல்லாஹ்! தாங்கள் மிஃராஜ் விண்வெளிப் பயணம் சென்ற போது ஓர் ஆப்பிள் மரத்தின் கீழ் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஓர் பழத்தை கொடுத்து புசிக்கச் சொன்னார்கள். அந்த மரத்தின் கீழ் ஊன்றி வைக்கப் பட்டிருந்த இந்த வாளை தங்களிடம் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஒப்படைத்த அன்றே நான் அதை அறிந்திருந்தேன். என்பதாக கூறிய போது சத்தக்த யா ஃபாத்திமா! ஃபாத்திமாவே உண்மையை கூறிநீர் என்றதோடு அல்லாஹ்வின் குத்ரத்தால் ஓ அலீயே! ஃபாத்திமா அறிந்தார்கள் என்றார்கள்.

மேற்கண்ட ஹதீஸ் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்து செய்து முடிவுற்றாலும் ஹதீஸ் கலை வல்லுனர்களான முஹத்திஸீன்கள் ஆச்சரியப்படத்தக்க குதாவின் குத்ரத்தில் அதிசயமான செய்திகளை பதிவு செய்கிறார்கள்!

சுலைமான் பின் தாவூத் அஸ்கலானி என்ற பெரியார் ஜஹ்ரதுர் ரியாஸ் என்ற கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள் ;

1. இந்த வாள் வழங்கப்பட்டது சுவனத்தில் மிஃராஜ் பயணத்தின் போது.
2. அன்னை ஃபாத்திமா உலகில் ஜனிக்கவே இல்லை.
3. அந்த ஹதீஸில் வரும் அந்த சுவனத்து ஆப்பிள் பழத்தை எடுத்து வந்ததாகவும் அதை அன்னை கதீஜாவுக்கு புசிக்கச் கொடுத்ததாகவும், அந்த இரவில்தான் சுவனத்தின் தலைவி அன்னை ஃபாத்திமா கதீஜா அம்மையின் வயிற்றில் கருவானார்கள் என்றும் ஹதீஸ் கிதாபில் பதியப்பட்டுள்ளது.

எனக்கு சுவனத்தின் நறுமணம் நுகரும் ஆசை மேலிட்ட போதெல்லாம் நான் ஃபாத்திமாவின் நெற்றியை முகர்வேன் இந்த வாள் ஹஜ்ரத் அலீயிடம் கொடுக்கப்படும் என்பதை அன்னை ஃபாத்திமா அறிந்தே வைத்திருந்தார்கள்.

இந்த ஹதீஸை அன்னை ஆயிஷா ரிவாயத்து செய்ததாக அல் கதீப் வத்ததல்லாபி இன்னும் அபூ ஸயீத் அவர்கள் தமது சர்புன் நுபுவத் எனும் கிதாபில் பதிவு செய்கிறார்கள்.

இந்த வாளைப் பற்றி ஓர் கவிதை இப்படி பறை சாற்றுகிறது.

شاہِ مرداں شیرِ یزداں قوتِ پروردگار

لافتاح الاعلی لاصیفِ الاذوالفقار

**ஷாஹே மர்தான் ஷேரே யஸ்தான் குவ்வதே பர்வர்திகார்**

**லா ஃபத்தாஹ் இல்லா அலீ லா சைஃப இல்லா ஜுல் ஃபிகார்.**

**பொருள் :** ஆண்மையின் அரசராய் அல்லாஹ்வின் புலியாய், இறைவனின் சக்தியால் விளங்கும் அலியாரிடம் இவற்றை வேண்டுவோர் பெற்றுக் கொள்ளுங்கள். காரணம் வெற்றி என்பது அலீயாரைத் தவிர யாருக்கும் இல்லை. துல் ஃபிகாருக்கு இணையான வேறு போர்வாள் இல்லை.

இந்த போர்வாள் அஹ்லே பைத்து சையதுமார்களின் கிளையில் வாழையடி வாழையாய் இருந்து வந்தது என்று வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. இக்கவிதையில் உள்ள இரண்டாம் அடியான அரபி பைத் ஹதீஸில் வந்த சொற்றொடர் ஆகும். இந்த ஹதீஸ் பல கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளது.

இந்த பார்ஸி அரபி கலந்து கவிதை புனித தற்காப்பு போர் நடத்தும் அத்துணை முஸ்லீம் வீரதீரர்களும் தமது வாளில் பதிய வைத்திருந்தார்கள் என்பது வரலாற்று ரீதியாய் நிருபணப்படுத்தப்பட்டுள்ளது.

முகலாய சக்ரவர்த்தி ஷரீஅத்திற்கு மிகவும் கட்டுப்பட்டு நடந்த பாதுஷா அவுரங்க ஜேப் அவர்கள் தமது வாளில் இந்த பைத்தை எழுதி வைத்திருந்ததாகவும், ஆங்கிலேயருக்கு எதிர்ப்பாக போர் புரிந்து ஷஹீது எனும் வீரமரணம் தழுவிய திப்பு சுல்தான் மற்றும் ஹைதர் அலீ போன்றோர் தத்தமது வாள்களில் இந்த பைத்தை பொறித்து வைத்திருந்தார்கள்என்பதாக ஸல்தனத்தே குதாதாத் எனும் நூலில் மஹ்மூத் கான் மஹ்மூத் என்பவர் இந்த செய்தியை பதிவு செய்துள்ளார்கள்.

இந்த புகழ்ச்சியின் காரணமாகத் தான் அந்த வாளின் பெயரைச் சொல்லி அனைத்து பக்கீர்மார்களும் நிதா சதா என்ற தங்கள் முறையீட்டின் போது இந்த பைத்தை ஓதிய வண்ணம் உரூஸ் கந்தூரி வேலைகளிலே கர்தப் எனும் அரேபிய கலை நுணுக்கங்கள் செய்து இஸ்லாத்தின் மேன்மையை பறை சாற்றுவார்கள். லா ஃபத்தாஹ் இல்லா அலீ என்ற வாசகத்தை (ஃபக்கீர்கள்) ஓங்கி முழங்குவதற்கு கீழ்காணும் ஹதீஸ் ஆதாரமாக உள்ளது.

சையத் சையிதினா இமாம் ஜஃபர் சாதிக் இப்னு முஹம்மது பாக்கர் இப்னு ஜைனுல் ஆபிதீன் இப்னு ஹஸன் இப்னு அலீ ரிவாயாத்து செய்கிறார்கள்.

பத்ரு யுத்த நாளில் நான் செவிமடுத்தேன். ஜன்னத் மலாயிக்கத்துகள் ரில்வான் எனும் எனும் மலக்கு சத்தமாக கூவி முழங்கியது. துல் ஃபிக்காரைத் தவிர வெற்றி போர் ஏதும் இல்லை. அலீயைத் தவிர வீரமுடையோர் யாருமில்லை. **ஆதாரம் : ரியாலுன் நிஸரத்தி பீ பஜாயிலுன் அவுரத்தி முஹிப்புத் திப்ரி**

வாசகப் பெருமக்களே! மேற்கண்ட ஹதீஸ்கள் இஸ்லாத்தின் நான்காம் கலீஃபாவாகிய அலீயார் சுவர்க்க லோக தலைவியாகிய அன்னை ஃபாத்திமா ஆகியோரின் அதிசயிக்கத் தக்க அற்புத மேன்மைகயையும், அல்லாஹ் அவர்கள் மீது இறக்கி வைத்துள்ள அளப்பரிய நிஃமத்துக்களையும், பறைசாற்றுகிறது. மேலும் ஃபக்கீர்மார்களான பான்வா, மண்டல், தபகாத்தி, ஜலாலி, ரிஃபாயி போன்ற புகராக்கள் செய்யும் நிதா சதா எனும் வழிமுறைகள் ஹதீஸ்கள் சார்ந்தவைதான் என்பதும் இதன் மூலம் தெரிய வருகிறது. அல்லாஹ் அவன் ஹபீபின் பொருட்டால் நேரிய பாதை யில் நம்மை நடத்தாட்டுவானாக அமீன்.

**இன்ஷா அல்லாஹ் மேலும் மொழிவோம்.....**

**ஒபாமா + ஒசாமா ÷ யூதம் + வஹ்ஹாபியம் = உலகமகா தீவிரவாதம்!**
**நம்மை ஆள்வது அமெரிக்காவா?**
**அமெரிக்காவிற்கு விலை போகும் தேச துரோகிகள்...**
**அன்னா ஹஸாரேவின் லோக்பால் மசோதாவை மழுங்க வைக்கும் அரசியல்வா(வியா)திகள்...**
**தேர்தல் திருவிழா ஒட்டகனாரின் ஒரு வரிசெய்திகள்...**

வழக்கத்திற்கு மாறாக தர்கா இதழ் அலுவலகத்தில் ஒட்டகனார்....சரியான நேரத்தில் ஆபீஸ் திறக்கப்படுவதில்லை. லீவ் எடுக்க ஒரு விவஸ்தையில்லை. 60 நாட்களில் ஒரு முறை 20 பக்க மேட்டர் டைப் அடித்து அலைன்மெண்ட் பார்த்து ரெடி செய்ய முடியவில்லை என்றால் என்ன பெரிய வெட்டி வேலை பார்க்கிறார்களோ! இரண்டு நாளைக்கு ஒரு பக்கம் என்றாலும் 40 நாளில் 20 பக்கங்களில் டானென்று இதழ் தயாரிக்கலாம் என்று ஒரே புலம்பல்.

உமக்கு என்ன சொல்லிவிட்டு போற ஆள் தானே! செஞ்சுபார்த்தா தெரியும். கரண்ட் கட்! சான்றிதழ் தயாரிப்பு, பரிசளிப்பு, கந்தூரி, என்று நடுநடுவே வேளைகள் தேடிவந்துடுது. நாக்கு நீட்டாக இருக்கிறது என்று நீட்டி முழக்க வேண்டாம் என ஆசிரியர் முறைத்தார்.

இப்போது, கூட ஒரு அடியாள் வேறு துணைக்கு என ஒட்டகனார் முணுமுணுக்க நாம் இடையில் புகுந்தோம்.

பாலைவனக் கப்பலே! பாரி வள்ளலே! செய்தியை வாரி வழங்கும்! என்றோம்.

போன வாட்டி என் செய்தி இல்லாததை யாரும் கண்டுகல, இப்போ என்ன செய்தி கேட்க வந்தீர் என நம் மீது கோபம் டைவர்ஷன் ஆவதைக் கண்டு சித்திரை கோடையில் பெய்த மழையால் குளிர்வித்தோம். மூடுக்கு வந்த ஒட்டகனார் கூறத்தொடங்கினார்.

அடுத்தடுத்து அணு குண்டு. விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்களில் இருந்து வெடித்து எழும் கேள்வி. நம்மை ஆள்வது அமெரிக்காவா? இப்படி நாம் யாரும் சொல்லவில்லை. பெரிய ஜீனியர்ஸ் சேர்ந்து நடத்தும் புதிய தலைமுறை 31, மார்ச்சு 2011 இதழில் ஒன்றும் தெரியாத மக்குப் பிரதமரின் படம் போட்டு தலைப்புச் செய்தியாய் வெளியிட்டுள்ளது. நான் சில இதழ்களுக்கு முன்னால் மணிசங்கர ஐயர் பெட்ரோலியத் துறையில் ஈரானில் இருந்து குழாய் வழியாய் இயற்கை எரிவாய்வை மாற்ற முயற்சித்த போது டம்மி போஸ்டிங்கு தூக்கி எறியப்பட்ட போதே சொல்லியிருந்தேன். அமெரிக்கா சொல்லித்தான் ஏதும் தெரியாத அப்பாவி பிரதமர் மணிசங்கர ஐயரை மாற்றினார். அது அணு குண்டு 1.

அவர் மாற்றப்பட்டது அமெரிக்கா சொல்லித்தான் என்று கேபிள் எண்.51058 ரகஸிய செய்தி என்று அமெரிக்க தூதரக செய்தியால் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என இப்போது ருஜுவாகியுள்ளது.

கேபிள் எண். 225053 ரகஸியம் அணு குண்டு 2 மண்டே சிங் அலுவாலியா என்ற அமெரிக்க அடிவருடியை ஏன் நிதியமைச்சராய் நியமிக்கவில்லை என ஹில்லாரிக் கிளிண்டன் கேட்டிருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது.

கேபிள் எண். 162458 ஜுலை 17, 2008 ஆட்சி கவிழாமல் ஓட்டுப்போட எம்.பி.களுக்கு அலமாரி திறந்து கட்டுக்கட்டாய் கோடிகளை காட்டியுள்ளது வெளிவந்துள்ளது.

கேபிள் எண்.203792 ஏப்ரல் 23, 2009 இலங்கை பிரச்சனையில் பிரணாப் முகர்ஜியும், யு.என்.ஓ. அமெரிக்காவும் சேர்ந்து உள்குத்து வேலை பார்த்தது வெட்டவெளிச்சமாகியுள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

அந்த பத்திரிக்கை, இப்போது நம்மை ஆள்வது அமெரிக்காவா என்று கேள்வி கேட்பது சரிதானே? கோடிகள் வாங்கி நாட்டை அடகு வைக்கும் ஆளும் கதர்கட்சி அரசியல் வாதிகளான தேச துரோகிகளுக்கு இதைப் பற்றி சிந்திக்க நேரம் ஏது?

அரேபிய தீபகற்பத்தில் அதிலும் இஸ்லாமிய நாடுகளில் புரட்சிகள் வெடித்துக் கிளம்புகின்றனவே அதைப்பற்றி... என்றோம்.

அங்கே மக்கள் கிளர்ந்தெழுந்து சரியான புரட்சியை ஏற்படுத்தி வெற்றி நடை போட எல்லா முயற்சிகளும் நடக்கிறது. ஆனால் சரியான தலைமையின்மையால் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளதை அமெரிக்க யூத ஓணான் ரத்தம் நக்க நாக்கை தொங்கப் போட்டு நேட்டோ, மக்களுக்கு உதவி, மனிதாபிமானம் என்ற போர்வையில் தீவிரவாதத்தை விதைக்கிறது.

எப்படி ஊழலுக்கு லோக்பால் மசோதா கொண்டு வர முயற்சிக்கும் அண்ணா ஹசாரேவின் முயற்சியை எல்லா அரசியல்வாதிகளும் ஆஹா ஓஹோ என புகழ்ந்து திருடனும் கூட்டத்தில் புகுந்து திருடன் திருடன் என்று கத்திக் கொண்டு ஓடிய கதையாய் இருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும், நமது தேர்தல் திருவிழாவைப்பற்றி என செய்தியை மாற்றினோம்...

எல்லாம் இளவு காத்த கிளியாய் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். தேர்தல் கமிஷனும், சில அதிகாரிகளின் பணிகளும் பாரட்டுக்குரியன. யார் வந்தாலென்ன? அதே பழைய கள்ளு புதிய மொந்தை ஒபாமா வந்தால் உலகமே சாந்தியும் சமாதானமும் பூத்துக்குலுங்கும் என்றார்கள். என்ன நடக்குது? புரட்சியை ஆதரிக்கிறோம் என்று புறவழியாய் மக்களை நேட்டோ படைகள் நாசம் செய்கின்றன அல்லவா லிபியாவில். ஏன் சவூதியையும், குவைத்தையும் விட்டு வைத்துள்ளார்கள்? அது போல் தான் ஆளும் எதிர்கட்சிகள் எல்லோருமே திருடர்கள் தான். பக்கா திருடர்ர்ர்... இல்லாமல் முக்கா திருடர் வரட்டுமே என்பது தான் மக்கள் மனநிலை.

திடீர் செய்தியாக வந்த ஒசாமா படுகொலை செய்யப்பட்டதைக் கூறியதும் சற்று தயக்கத்துடன் யோசனையில் நின்ற ஒட்டகனார் நான் என்னத்தைச் சொல்ல வஹ்ஹாபிய வினை விதைத்தவன் வினையைத்தான் அறுக்க வேண்டும். அமெரிக்காவால் அன்போடு வளர்க்கப்பட்ட கெடா மார்பில் முட்டியது. அமெரிக்காவில் ஒபாமாவின் செல்வாக்கு அதளபாதாளத்தில் அடியில் சென்றுவிட்டதால் வேறு வழியில்லாமல் போட்டுத்தள்ளியிருக்கிறார்கள். படுகொலை செய்யப்பட்ட செய்திகளெல்லாம் சில நாட்களுக்குப் பின் தான் ரெக்கைக்கட்டிப் பறக்கும். ஆனால் இப்போது என்னால் விரிவாக சொல்லமுடியாது. அதற்கு பதிலாக 3.05.2011 தினமணியின் தலையங்கத்தின் முக்கிய குறிப்புகளை படித்துப் பாரும்.

...பின்லேடின் போன்ற ஒரு தீவிரவாதியை உருவாக்கியது அமெரிக்காவின் பணமும், பேராசையும், ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் அத்துமீறலும்தான் என்பதையும், ஒபாமா நினைவுகூர்ந்து இருக்க வேண்டிய தருணம் இது.

...இன்று தங்களால் வளர்க்கப்பட்ட முன்னாள் நண்பனான இந்நாள் எதிரியை அமெரிக்கா வீழ்த்தியிருக்கிறது. (நமக்கென்ன?)

...சுட்டுக் கொள்ளப்பட்ட அடுத்த நிமிடம் இந்த தகவலை அமெரிக்க அதிபர் முந்தைய அதிபர்களான ஜார்ஜ் புஸ், பில் கிளிங்டன் ஆகியோர்களிடம் தான் சொல்கிறார். அவர்கள் தேசத்தை ஒன்றாகப்பார்கிறார்கள். உலகம் முழுவதும் அமெரிக்கா அயோக்கியத்தனம் செய்கிறது என்றாலும், இந்த அரசியல் பலம் தான் அவர்களின் வெற்றிக்கு அடிப்படையக இருக்கிறது.

...பாகிஸ்தான் சும்மாயிருக்குமேயானால் இந்தியாவின் சிறியதொரு தனிப்படை அங்கே சென்று மும்பைத் தாக்குதலில் 200 பேரைக் கொன்றுக்குவித்தவர்களைப் பிடித்து இந்தியாவுக்கு கொண்டுவரவும் முடியும், இந்திய ராணுவத்திடமும், புலனாய்வு பிரிவிடமும் அதற்கான திறமையும் இருக்கிறது. இந்தியாவுக்கு அரசியல் பலம் தான் இல்லை.

...உள்ளவன் சொல்வதெல்லாம் உண்மையல்லாமல் என்ன? வென்றவன் சொல்வதெல்லாம் வேதமல்லாமல் என்ன? என்பார் கவியரசு கண்ணதாசன். உண்மை. (ஒரு நாட்டின் இறையாண்மைக்குள் புகுந்து எந்தவித சர்வதேச சட்டங்களையும் மதிக்காமல்) அமெரிக்கா செய்தால் அதுசாதுரியம், சாகசம், நியாயம். இந்தியாவோ வேறொரு நாடோ செய்தால் அது அன்னிய சக்திக்குள் நடத்தப்பட்ட அத்துமீறல். ஒரு பயங்கரவாதி கொல்லப்பட்டான் என்று மகிழ்ச்சியும் அடையலாம். **வல்லரசுகளின் அதிகாரப்பூர்வமான தீவிரவாதம் அங்கீகரிக்கப்படுகிறதே** என்று வருத்தமும் படலாம். அது அவரவர் பார்வையைப் பொறுத்தது. **நன்றி : 03.05.2011 தினமணி தலையங்கம்.**

கவலை தோயந்த குரலில் இவற்றையெல்லாம் அடுக்கிய ஒட்டகனார் உலகதேசங்களால் அங்கீகிரிக்கப்பட்ட லிபிய அதிபரின் மாளிகையை தகர்ப்பதும், அவர்களின் குடும்பத்தாரை கொள்வதும், லிபிய நாட்டையே துவம்சம் செய்வதும் பின்லேடின்களை உருவாக்காமல் காந்திகளையா உருவாக்கும்? இஸ்லாமியருக்கு எதிரான அமெரிக்காவின் போரல்ல என்று சொல்லும் ஒபாமா ஆப்கானிஸ்தானை அக்குவேறு ஆணிவேறாக அழித்ததும், சத்தாம் ஹுஸைனையும், ஈராக்கையும் அழித்து , பெண்கள், குழந்தைகளை இன்று வரை கொன்று குவிப்பதும், லிபியாவில் புகுந்து அட்டகாசம் செய்வதும் இஸ்லாமியருக்கு செய்யும் உதவியோ? யூதம் தான் பதில் சொல்லவேண்டும் என்று சலிப்புடன் கிளம்பிச் சென்றார் ஒட்டகனார்.

# அணு சக்தி வேண்டவே வேண்டாம்...!

## 9 நோபல் அறிஞர்கள் வேண்டுகோள்...!

## இந்தியத் தலைவர்கள் மண்டையில் உரைக்குமா...?

வாஷிங்டன் ஏப்.21 : அணு மின்சாரம் அழிவானதோ, அணு மின்சாரம் தயாரிப்பு முறைகள் பாதுகாப்பானதோ, அணு மின்நிலையத்தை நிறுவுவது எளிதானதோ இல்லை என்பதால் உலகில் இனி புதிதாக அணு மின்சார உற்பத்தி நிலையங்களே வேண்டாம் என்று சமாதானத்திற்கான நோபல் விருது வாங்கிய 9 உலக அறிஞர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியா, சீனா உட்பட அணு மின்சார நிலையங்களில் அதிகம் முதலீடு செய்துள்ள 31 நாடுகளின் தலைவர் களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அவர்கள் இதை குறிப்பிட்டுள்ளனர். அணு குண்டு எத்தகைய ஆபத்தானது என்பற்கும், அணு மின்சார நிலையங்கள் எந்த அளவுக்கு ஆபத்தானவை என்பதற் கும் ஜப்பானை விட வேறு சிறந்த உதாரணம் உலகுக்கு தேவையில்லை. அனல், புனல் தவிர மின்சாரம் தயாரிக்க இயற்கையில் எத்தனையோ வழிமுறை கள் உள்ளன. அவற்றிற்குச் செலவு அதிகம் ஆனாலும் மனித குலத்துக்கு ஆபத்து இல்லாத அந்த வழிகளையே இனி கைக்கொள்ள வேண்டும். உலகில் இப்போது உள்ள 400க்கும் மேற்பட்ட அணுமின்சார உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மொத்த மின்சாரத்தின் அளவு வெறும் 7சதவீதம் தான் என்பதால் இந்த அணு மின் நிலையங்களில் உற்பத்தியை நிறுத்தி அவற்றை அக்கு வேறு ஆணிவேறாகக் கழற்றி அப்புறப் படுத்தினாலும் பெரிய நஷ்டம் வந்துவிடப்போவதில்லை. அதே சமயம் இப்போதுள்ள தலைமுறையும், இனிவரும் தலைமுறையும் அணுக்கதிர் வீச்சிலிருந்து தப்பிக்கும். இயற்கையி னாலோ, போரினாலோ அணு மின்சார நிலையங்களுக்கு ஆபத்து நேரிட்டால் அதன் விளைவு மிகப் பேராபத்தாக இருக்கும் என்பதை ஹிரோஷிமா, நாகசாகி மட்டுமல்ல செர்னோபில், புகுஷிமாவும் உணர்த்திவிட்டன. அணுமின்சார நிலையங்களுக்கு எந்த ஆபத்தும் வராவிட்டாலும் கூட அணுக்கழிவுகளைப் புதைப்பது மிகப் பெரிய பிரச்சனை என்பதை விஞ்ஞானிகள் அனைவருமே ஒப்புக் கொள்வார்கள். மனிதகுலத்திற்கே மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்கும் இந்த அணுமின்சார நிலையங்களை மூடி அப்புறப்படுத்திவிட்டு ஆபத்து இல்லாத வகையில் மின் ஆற்றலை பெறுவோம் என்றே அணு விஞ்ஞானிகள் வேண்டுகோளில் வலியுறுத்தியிருக்கின்றனர்.

ஆர்ச் பிஷப் டெஸ்மாண்ட் டுட்டு, அடோல்ஃபோ பெரஸ் எஸ்கிவெல், ஜோஸ் ரமோஸ் ஹோர்தா, பெண் நோபல் அறிஞர்கள் பெட்டி வில்லியம்ஸ், மைரெட் மெகயர், ரிக்கோ பெர்டா மெஞ்சும், ஜோடி வில்லியம்ஸ், ஷிரீன் எபாடி, வாங்காராய் மாதாய் ஆகியோர் கையெழுத்திட்ட நோபல் அறிஞர்கள் ஆவர்.

ஆனால் அணு மின்சார தயாரிப்பு சாதனங்களையும், தொழில் நுட்பங்களையும் விற்கும் நிறுவனங்கள் கற்பனைக்கு எட்டாத வகையில் கோடிக்கணக்கான ரூபாய் லாபத்தில் இயங்குபவை. வளரும் நாடுகளின் அரசியல் தலைவர்களையும், ஆட்சியா ளர்களையும் கவனிக்க வேண்டிய விதத்தில் கவனித்து வளைத்துப் பிடித்திருப்பவை.

எனவே மக்களின் நன்மைக்காக தான் அணு மின்சார நிலையத்தை நாடுகிறோம். இதன் உற்பத்தி செலவு குறைவு மூலப் பொருளுக்கு பஞ்சமே வராது கண்ணில் விளக்கெண்ணெய்யை விட்டுக் கொண்டு இந்த நிலையத்தை 24மணி நேரமும் கண்காணிப்போம். அதற்கு நாங்கள் உத்திரவாதம் தருகி றோம் என்று பசப்பு வார்த்தை களைக் கூறி நாடாளுமன்றத்தில் உள்ள மிருகபல மெஜாரிட்டியைக் கொண்டு தீர்மானமும் நிறைவேற்றி இந்த நிலையங்களை புதிது புதிதாக திறந்து கொண்டேபோவர்கள் எனவே நோபல் அறிஞர்கள் மட்டும் குரல் கொடுத்துப் பயனில்லை. மக்களும் இதன் ஆபத்தை உணர்ந்து ஒன்று திரண்டால்தான் இந்த ஆபத்தைத் தடுக்க முடியும் என்கின்றனர் நடுநிலையா ளர்கள். **நன்றி, தினமணி : 22,ஏப்ரல் 2011**


## பணியாட்கள் தேவை...!

**மதுரை** மேலூர் டோல்கேடிற்கு அருகில் இயங்கிய வரும் **அல் ஜாமிஅதுல் கௌஸுல் வரா மதரஸாவிற்கு** நிர்வாகத்தில் நல்ல அனுபவமிக்க, சுன்னத் வல் ஜமாஅத் அகீதா பிடிப்புள்ள 40 வயதிற்கு மேற்பட்ட **தகுதியான நபர்கள் தேவை.**

பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கூடிய சுய விபரங்களை கீழ்காணும் விலாசத்திற்கு உடனே அனுப்பிவைக்கவும். தவறாமல் தங்களுடைய முழு விலாசத்தையும் செல் போன் நம்பரையும் குறிப்பிடவும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**Gausiya Foundation**
**No.24, Jadamunikovil St, Madurai**
**Mobile : 98940 37055**

# இஸ்லாமிய மார்க்க சட்ட விளக்கங்கள்...!

மார்க்க சட்ட விளக்கங்கள் என்னும் தலைப்பில் வரும் இப்பகுதி ஹனஃபி மஜ்ஹபில் முக்கியமாக கருதப்படும் முன்னியத்துல் முஸல்லி என்ற தொழுகை வழிகாட்டி நூலின் மொழிப் பெயர்ப்பாகும். இது எல்லோருக்கும் பயன்தரும் என்றாலும் குறிப்பாக உலமாக்கள், மதரஸா மாணவர்கள் அரபி சொற்றொடர்களை கோர்வை செய்து படிப்பார்களேயானால் அசல் நூலான முன்னியத்துல் முஸல்லியின் மத்தன் இபாரத் கிடைக்கப்பெறுவார்கள். (ஆ-ர்)

**ஒலு மூன்று வகையாகும்.**

1. தொழுகை, சஜ்தா திலாவத், குர்ஆனை தொடுதல் இவைகளுக்காக ஒலு செய்வது ஃபர்லாகும்.
2. ஸவாபிற்காக ஒலு செய்வது வாஜிபாகும்.
3. ஒலுவில் நிரந்தராமாக இருப்பதற்கும், தூங்கும் போதும், பொய், புறம், கோள் இவைகளைப் பேசியதற்காகவும் தொழுகையல்லாத நேரங்களில் ஏற்பட்ட வெடிச்சிரிப்பிற்காகவும், ஜனாசாவிற்கு ஒலுச் செய்து வைப்பதும் முஸ்தஹப்பாகும் எனப் ஃபதாவா காளீகான், குலாசா போன்ற கிரந்தங்களல் காணப்படுகின்றன.

قَالَ اللّٰهُ تَعَالىٰ يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ

விசுவாசிகளே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரையில் உங்களது இரு கைகளையு, கணுக்கால் வரையில் உங்களது இரு பாதங்களையும் கழுவிக் கொள்ளுங்கள். மேலும் (உங்கள் கைகளில் நீரைத் தொட்டு) உங்கள் தலையைத் தடவி மஸஹு செய்து கொள்ளுங்கள் *5: 6*

**கஸ்ல் :** غَسْلٌ

ஓடுதல் என அகராதியில் பொருள்படும். உறுப்புகளில் நீர் வடிந்து ஓடுவதற்கு மார்க்க ரீதியில் கஸ்ல் என்று சொல்லப்படும். ஓடி விழுகின்ற நீர் ஒரு சொட்டிருந்தாலும் போதுமென அபூ ஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள். ஓடும் நீர் சொட்டுகளிடும் அளவிற்கு வடிய வேண்டும்மென்ற நிபந்தனை கிடையாதென அபூயூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்.

**வுஜூஹுன் :** وُجُوْهٌ

இது வஜ்ஹுன் என்ற பதத்தின் பன்மையாகும். முகத்தின் அளவு : நெற்றி ரோமத்திலிருந்து முகவாய்க்கட்டை வரை நீளத்திலும், ஒருகாது முதல் மறு காது வரை அகலத்திலாகும்.

**மஸஹ் :** مَسْحٌ

ஒரு பொருளினால் மற்றொரு பொருளைத் தடவுவதற்கு மஸஹ் என்று அகராதியில் கூறப்பட்டுள்ளது. ஈரக்கையினால் தலையின் பாகத்தைத் தடவுவதற்கு மஸஹு என்று இங்கு குறிக்கப்படும். தயம்மும் செய்யும் போது மேற்கூறப்பட்ட அகராதிப் பொருளையே கவனிக்கப்படும்.

**அர்ஜுல் :** اَرْجُلٌ

இது ரிஜ்லுன் என்ற பதத்தின் பன்மை. சிலர் லாமிற்கு கஸர் செய்து اَرْجُلِكُمْ அர்ஜுலிகும் என்பதை வ رُءُوْسِكُمْ ருஊசிகும் என்ற வார்த்தை யுடன் இணைத்து ஓதுகின்றனர். அதன் மூலம் காலுக்கு மஸஹ் செய்யலாம் என ஷியாக்கள் போன்றவர் கூறுகின்றனர்.

ஆனால் ஸஹாபாக்களில் யாரும் காலுக்கு மஸஹ் செய்ததை நான் பார்த்ததில்லை என அதாவு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். மேலும் இவ்வாறே ஸஹாபாக்களின் ஏகோபித்த முடிவும் உள்ளது. ஸஹீஹான ஹதீஸ்களும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன.

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒலூ செய்து கரண்டை காலுக்கு மஸஹ் செய்யக்கூடிய ஒரு கூட்டத்தினரைப் பார்த்து காலுக்கு மஸஹ் செய்பவருக்கு வைல் என்ற ஓடை ஏற்படட்டுமாக எனப் பிரார்த்தனைப் புரிந்துள்ளார்கள்.

***அறிவிப்பாளர் ஹஜ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு நூல் : புகாரி, முஸ்லிம்.***

இவ்வாறு பல ஹதீஸ்களும் இடம் பெற்றுள்ளன.

وَالْمِرْفَقَانِ وَالْكَعْبَانِ تَدْخُلَانِ فِىْ فَرْضِ الْغَسْلِ

முழங்கையின் மூட்டும் கால் மூட்டும் கழுவுவது ஃபர்ளு என்பதில் சேர்ந்து விடும். (அதாவது கால்களையும் கழுவுவது ஃபர்ளாகும்.)

وَكَذَا مَابَيْنَ الْعِذَارَيْنِ وَالْاُذُنَيْنِ يَجِبُ غَسْلُهُ

இவ்வாறே இரு காதுகளுக்கும், தாடிக்கும் மத்தியிலிருக்கும் பாகத்தை கழுவுவது வாஜிபாகும்.

கால்களைக் கழுவுவதற்கு முடியாவிட்டால் அதற்குப் பகரமாக (மோஜாவின் மேல் மஸஹ் செய்வதைப் போன்று) மஸஹ் செய்வது ஃபர்ளாகும். ஆனால் ஹஜ்ரம் இமாம் அபூ ஹனீஃபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் முகத்தின் அளவில் சேர்ந்திருக்கும் பகுதியையும் கழுவுவது ஃபர்ளாகும் என கூறுகின்ற சொல்லே சரியான சொல்லாகும். மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும் என முஹீத், மிஅராஜுத் திராயா, ஃபதாவா லஹுரிய்யா போன்ற கிதாபுகளில் காணப்படுகின்றன.

وَالْمَفْرُوْضُ فِىْ مَسْحِ الرَّأْسِ مِقْدَارُ النَّاصِيَةِ وَهُوَ رُبُعُ الرَّأْسِ

தலைக்கு மஸஹ் செய்வதில் ஃபர்ளாகிறது ; தலையின் முன்பாக உள்ள ரோமங்களின் அளவாகும். அது தலையின் நான்கில் ஒரு பங்காகும்.

தலை முழுவதும் மஸஹ் செய்ய வேண்டும் என இமாம் மாலிக். இமாம் அஹ்மத் ஆகிய இருவரும் கூறுகின்றார்கள். உறுப்பில் சில பாகத்தை (சில முடிகளை) மஸஹ் செய்வது தான் கடமை என ஹஜ்ரத் இமாம் ஷாஃபி அவர்கள் கூறுகிறார்கள்.

لِمَا رَوَى الْمُغِيْرَةُ بْنُ شُعْبَةَ رَضِىَ اللّٰهُ عَنْهُ اَنَّ النَّبِىَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَتٰى سُبَاطَةَ قَوْمٍ فَبَالَ وَتَوَضَّأَ وَمَسَحَ عَلٰى نَاصِيَةِ وَخُفَّيْهِ

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒரு கூட்டத்தாரிடம் வந்தார்கள். சிறுநீர் கழித்தார்கள். ஒலு செய்தார்கள். அப்போது தங்களுடைய தலையின் முன் பாக முடியின் மீதும் மஸஹ் செய்தார்கள் என ஹஜ்ரத் மகீரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒருவன் தண்ணீரில் நனைந்த மூன்று விரல்களைத் தலையில்

வைத்தான். வைத்தபடியே எடுத்துவிட்டான். இவன் வைத்ததே மஸஹுக்குப் போதுமென்று இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள். தலையின் கால்பாக அளவிற்கு ஈரம் படும் வரை கையினால் தடவவேண்டும். அவ்வாறில்லையாயின் மஸஹ் கூடாதென இமாமுல் அஃலம் ஹஜ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் இமாம் அபூ யூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகியோர் கூறுகின்றார்கள்.

وَاَمَّا سُنَنُهُ

**ஒளுவின் சுன்னத்துக்களாவன ;**

فَغَسْلُ الْيَدَيْنِ قَبْلَ اِدْخَالِهِمَا الْاِنَآءَ اِلَى الرُّسْغِ ثَلٰثًا

பாத்திரத்தில் தமது இரு கைகளையும் நுழைப்பதற்கு முன் மணிக்கட்டு வரை மூன்று தடவை கழுவுவது.

لِمَا اَنَّهُ عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ قَالَ اِذَا اسْتَيْقَظَ اَحَدُكُمْ مَنْ نَوْمِهِ فَلَا يَغْمِسْ يَدَهُ فِى الْاِنَاءِ حَتّٰى يَغْسِلَهُمَا ثَلٰثًا فَاِنَّهُ لَا يَدْرِى اَيْنَ بَاتَتْ يَدُهُ

உங்களில் ஒருவர் தமது தூக்கத்திலிருந்து விழித்துவிட்டார். அவர் தமது கரத்தை மூன்று முறை கழுவுவதற்கு முன் பாத்திரத்தில் புகுத்திவிட வேண்டாம். ஏனெனில் அவரது கரம் இரவில் எங்கிருந்தது என அறியமாட்டார் என நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

சில அறிவிப்புகளில் فَلَا يَغْمِسَنَّ ஃபிளா எக்மிஸன்ன என உறுதியைத் தரும் நூனுடன் வந்துள்ளன. அவ்வாறிருப்பின் விலக்கலைத் தவிர்ப்பது வாஜிபாகும். அவனது கரம் இரவில் இருந்த இடம் அறியாததால் அக்கரத்தில் அசுத்தம் பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. சந்தேகத்தை நீக்குவதற்காக கரத்தை கழுவுவது முஸ்தஹப்பாகும்.

எனவே வாஜிபிற்கும், முஸ்தஹப்பிற்கும் இடைப்பட்ட சுன்னத்தான முறையே சிறந்தது என்று கூறுவதால் இந்நூலிலும் சுன்னத் என்றே கூறப்பட்டிருக்கின்றது.

وَتَسْمِيَّةُ اللّٰهِ تَعَالٰى فِى ابْتِدَاءِ الْوُضُوْءِ

**ஒளுவின் ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் கூறுவது.**

பிஸ்மில்லாஹ் கூறாதவருடைய ஒளு கூடாது. எவருடைய ஒளு கூடவில்லையோ அவருடைய தொழுகையே கூடாது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**நூல் : அபூ தாவூத்.**

பிஸ்மில்லாஹ் சொல்லுவது முஸ்தஹப்பு என்று முன்னோர்கள் கூறியதாக ஹதாயாவின் ஆசிரியரவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

وَالْاَصَحّ اَنَّهُ يُسَمِّى مَرَّتَيْنِ مَرَّةً قَبْلَ كَشْفِ الْعَوْرَةِ وَمَرَّةً بَعْدَ سِتْرِهَا عِنْدَ اِبْتِدَاءِ غُسْلِ سَائِرِ الْاَعْضَاءِ

இருமுறை பிஸ்மில்லாஹ் சொல்வான் என்பதே சிறந்த கருத்தாகும்.

1. சிறுநீர் கழிக்க மர்மஸ்தானத்தைத் திறப்பதற்கு முன்பாகவும், 2. சிறுநீர் கழித்துத் தன் மர்மஸ்தானத்தை மறைத்து ஒளுவின் உறுப்புக்களைக் கழுவுவதற்கும் முன்பாகவும் கூறுவான்.

சிலர் சிறுநீர் கழிக்க மர்மஸ்தானத்தை திறப்பதற்கு முன் பிஸ்மில்லாஹ் கூறுவது போதும் என்றும், ஒளுச் செய்ய மற்றைய உறுப்புகளை கழுவுவதற்கு முன்பாக பிஸ்மில்லாஹ் கூறினால் போதுமென்றும் வேறு சிலர் கூறியுள்ளார்கள்.

பிஸ்மில்லாஹ் கூறுவதை மறந்த மனிதன் ஒளுவின் இடையில் கூறினால் சுன்னத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டார் என இனாயா என்ற கிரந்தத்தில் கூறுப்பட்டுள்ளது.

والْمَضْمَضَةُ وَالْاِسْتِنْشَاقُ بِمَايِئَيْنِ جَدِيْدَيْنِ

புதிதாக இரண்டு முறை தண்ணீர் எடுத்து வாய் கொப்பளிப்பது, நாசிக்கு நீர் செலுத்துவது.

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இவ்விரண்டையும் நிரந்தரமாக செய்துள்ளார்கள்.

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஒளு செய்தார்கள். மும்மூன்று முறை வாய் கொப்பளித்தார்கள். நாசிக்கு நீர் செலுத்தினார்கள். ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு தண்ணீரை உபயோகித்தார்கள். எனத் தெளிவாகத் தப்ரானீ ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

وَاِيْصَالُ الْمَآءِ اِلٰى مَا تَحْتَ الشَّارِبِ وَالْحَاجِبَيْن

மீசைக்கும், இரு புருவங்களுக்கும் அடியிலுள்ள இடத்தில் தண்ணீரைச் சேர்ப்பது.

கைகளைக் கழுவும் போது விரல்களும் கழுவப்படுகின்றன. விரல்களைக் கோதிவிடுதல் என்பது தனித் சுன்னத் என்பது போல முகத்தைக் கழுவும்போது மீசையிலும், புருவங்களிலும் தண்ணீர் பட்டாலும் அப்பகுதியில் தண்ணீரைச் செலுத்துவது மற்றொரு சுன்னத்தாகும். மேலும் பர்ளைப் பரிபூரணமாக்கபட வேண்டுமென்பதற்காகவே சுன்னத்தாககப்பட்டுள்ளது. என்றும் கூறலாம் .

وَمَسْحُ مَا اُسْتُرْسِلَ مِنْ اللَّحْيَةِ وَتَخْلِيْلُهَا

தாடியில் தொங்கும் பகுதியை மஸஹு செய்வது, மேலும் அதைக் கோதிவிடுவது.

وَاسْتِبْعَابُ جَمِيْعِ الرَّأْسِ فِى الْمَسْحِ بِمَاءٍ وَاحِدٍ

ஒரு தடவை எடுத்த தண்ணீரினால் தலை முழுவதையும் மஸஹுச் செய்வது.

وَكَيْفِيَّةُ الْاِسْتِيْعَابِ

**தலை முழுவதையும் மஸஹு செய்வதன் முறை :**

اَنْ يَأْخُذَ الْمَآءَ وَيَبُلَّ كَفَّيْهِ وَاَصَابِعَهُ ثُمَّ يَلْصِقُ الْاَصَابِعَ وَضَعَ عَلٰى مُقَدَّمِ رَأْسِهِ مِنْ كُلِّ يَدٍ ثَلٰثَ اَصَابِع وَ يُمْسِكُ اِبْهَامِيْهِ وَشَبَابَتَيْهِ وَيُجَافِى بطْنَ كَفَّيْهِ وَيَمُدُّهُمَا اِلٰى الْقَفَا ثُمَّ يَضَعُ كَفَّيْهِ عَلٰى جَانِبَى الرأس وَ يَمْسَحُهُمَا بِكَفَّيْهِ

தண்ணீரில் தனது இரு கைகளையும் விரல்களையும் நனைத்தபின், பெருவிரல் ஆள்காட்டி விரலைத்தவிர மற்ற மூன்று விரல்களையும் சேர்த்துத் தலையின் முன் பாகத்தில் வைத்து, உள்ளங்கைகள் தலையில் படாதவாறு இழுத்துச் செல்வான். பிறகு இரு உள்ளங்கைகளையும் தலையின் பக்க வாட்டத்தில் வைத்து முன்பக்கமாக இழுத்துக் கொண்டு வரவேண்டும்.

ثُمَّ يَمْسَحُ ظَاهِرَ اُذُنَيْهِ بِبَاطِنِ كَفَّيْهِ وَبَاطِنَ اُذُنَيْهِ بِبَاطِنِ مُسَبَّحَتَيْهِ كَذَا ذَكَرَهُ فِى الْمُحِيْطِ

பெருவிரல் உட்புறத்தினால் காதின் வெளிப்புறத்தையும், ஆள்காட்டி விரலின் உட்புறத்தினால் காதின் உட்புறத்தையும் தடவுவான். இவ்வாறே முஹுத் என்ற நூலில் கூறி உள்ளனர்.

அபூதாவூத் என்ற ஹதீஸ் கிரந்தத்தில் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு தலைக்கு மஸஹு செய்ய உபயோகிக்க எடுத்த தண்ணீரின்றிப் புதிதாகத் தண்ணீர் எடுத்துக் காதுகளை மஸஹு செய்ய வேண்டுமென இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறுகின்றார்கள்...

**இன்ஷா அல்லாஹ்! இன்னும் விளங்குவோம்.....**

# திகைப்பான கேள்விகளுக்கு திறமையாக பதில் தந்த இமாமுல் அஃளம் ஹஜ்ரத் அபூ ஹனீஃபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்...!

தற்காலத்தில் இஸ்லாத்தின் நாற்பெரும் கலீஃபாக்களை நாகூசாமல் ஏக வசனத்தில் ஏகடியம் பேசுவோர் சிலர் உள்ளனர். இத்தனைக்கும் இப்படி அந்த நாதாக்களை ஏசும் இவர்களால் இஸ்லாத்திற்கு எள்ளின் முனையளவு கூட பயனில்லை. இவர்கள் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் பேடவுமில்லை. இவர்களால் இனியும் ஒரு பயனும் இல்லை.

ஆனால் ஏகவல்லோன் அல்லாஹு தஆலா இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாஃபயீ, இமாம் மாலிகி, இமாம் ஹம்பலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகிய தமது நேசம் பெற்றவர்களான அவர்களுக்கு தகுந்த அந்தஸ்தையும், மார்க்கத்தின் பால் பட்டறிவையும், வாரி வழங்கியுள்ளான். எனவே இன்றைக்கு 1400 ஆண்டுகள் தாண்டியுங்கூட இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் திகட்டாதபடி குர்ஆன் ஹதீஸ் இஜ்மாவு, கியாஸ்வாயிலாக சாதாரண பாமர முஸ்லிம்கள்கூட மார்க்கத்தில் ஈடுபாட்டுடன் பேணி நடந்து தக்வாதாரியாக வாழ முடிகின்றது என்றால் இந்த மார்க்க மேதைகள் பகுத்து ஆராய்ந்து குர்ஆன் முதல் ஹதீஸ் வரை தப்ஸீர்கள் முதல் வரலாறு வரை சஹாபாக்கள் முதல் வலிமார்கள் வரை கண்டு பேசி அலசி ஆராய்ந்துப் பார்த்து தந்தமையால் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு என்ற கடமைகளையும், நிக்காஹ் முதல் நடைமுறையிலான சட்டங்களையும், பிறப்பு முதல் இறப்பு வரையிலான - அதற்கும் அப்பாலான செயல் முறைகளையும் பற்றுதலுடன் பேணி நடந்துவர இன்று வரையில்லாமல் கியாம நாள் வரை காரணகர்த்தாக்களாக உள்ளபவர்கள் இம்மாமேதைகள். இஸ்லாதிற்கு இவர்களின் பங்களிப்பு அலாதியானது என்றால் மிகையல்ல.

அந்த நாற்பெரும் இமாம்களில் இமாமுல் அஃளம் என்று எல்லோராலும் முதன்மைப்படுத் தப்பட்ட ஹஜ்ரத் இமாம் அபூ ஹனீஃபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாழ்ந்த காலத்தில் இக்கட்டான மார்க்க சட்ட சர்ச்சைகள் நேர்ந்த போது எப்படி அவைகளுக்கு தீர்வு காண்பது என்ற அக்காலத்தில் வாழ்ந்த அத்தனை மார்க்க அறிஞர்களும் திகைத்து நின்ற போது மிக சர்வசாதாரணமாய் எளிமையாக இமாமுல் அஃளம் ஹஜ்ரத் அபூ ஹனீஃபா அவர்கள் தீர்த்து வைத்தார்கள் என்பதாய் நாம் அவர்களின் வரலாற்றில் உள்ள பற்பல சம்பவங்களால் அறிகிறோம். அவற்றில் நான்கு- சிறிய - அதே வேளையில் மிக கடுமையாக அன்றைய உலமாக்களால் இதற்கு தீர்வே இல்லை என்று திகைத்து முடிவுகட்டப்பட்ட நிலையில் இந்த மிக மிக எதார்த்தமாய் எளிய முறையில் இமாம் அவர்கள் தீர்த்து வைத்த போது மக்களின் ஆச்சரியத்திற்கு அளவேயில்லாமல் போனது. அந்த வரலாற்று சம்பவங்களில் நான்கை தர்கா இதழ் வாசகர்களுக்கு ஈமான் என்ற உருது இதழில் வந்ததை மொழியாக்கம் செய்து வழங்குகிறது.

## தலாக் என்ற விவாகரத்து....

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இடையே பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. கோப்பையில் குடிநீர் கொண்டு வந்த மனைவியை தண்ணீரை குடித்தாலோ தலாக் கொடுத்து விடுவேன். வீசி எறிந்து விட்டாலும் தலாக் சொல்லி விடுவேன். வேறு யாருக்கும் கொடுத்து விட்டாலும் உனக்கு தலாக்கு தான் உமக்கு விவாகரத்து ஏற்பட்டு விடும் என்று கூறினார். மனைவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கணவனுக்கு கோபம் தணிந்தது. நாம் இப்படி கூறிவிட்டோமே என் மனைவி தலாக் ஆகி விடுவாளோ என்று பயந்தார். இதற்கு தீர்வு காண மார்க்க அறிஞர்களை நாடினார். உலமாக்களும் பலவாறு யோசித்து ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திகைத்தார்கள். கடைசியாக அந்த நபர் இமாமுல் அஃளம் அவர்களை நாடினார்.

அதற்கு இமாம் அவர்கள், தண்ணீர் உறுஞ்சக்கூடிய ஒரு துணியைக் கொண்டு அந்த தண்ணீர் முழுவதும் உறுஞ்சும் படி அப்பாத்திரத்தில் முக்கி எடுக்கக் கூறினார்கள். அப்படி செய்வீர்களே யானால் தண்ணீர் யாருக்கும் குடிக்க கொடுக்காமலும், கீழே ஊற்றாமலும், துணியிலேயே உலர்ந்து போவதால் நீர் விதித்த ஷரத்துக்கு பங்கம் ஏற்படவில்லை என்பதால் தலாக் ஏற்படாது என்று விளக்கமளித்து சிக்கலான பிரச்சனையை இலகுவாக தீர்த்து வைத்தார்கள்.

ஒரு முறை இமாமுல் அஃளம் அவர்களிடம் சிலர் சென்று "ஒரு மனிதன் தனது மனைவி ஏணியில் ஏறிக்கொண்டிருந்த போது நீ ஒரு அடி மேலே ஏறினாலும், அல்லது கீழே இறங்கினாலும் தலாக் ஆகி விடுவாய் என்று கூறினார். அதற்கான தீர்வு என்ன என்று கூறினார்கள். அதற்கு இமாம் அவர்கள் சிலர் அந்த ஏணியை பிடித்து கீழே சமதளத்தில் வைத்து விடுவார்களேயானால் அப்பெண் தரையில் இறங்கிக் கொள்ளலாம். கணவனின் ஷரத்துப்படி அவள் ஒரு படி மேல் ஏறவுமில்லை. கீழ் இறங்கவுமில்லை எனவே தலாக் நிகழாது என்று தீர்வு கூறினார்கள்.

## சத்திய முறிவும் அதற்கான அற்புத தீர்வும்..

முஸ்லிம் ஒருவர் தாம் செய்த சத்தியத்தை முறித்துவிடுவாரேயானால் 60 நாட்கள் தொடர் நோன்பு வைக்க வேண்டும் அல்லது 60 ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் என்பது மார்க்க சட்டம்.

ஒருவர் தாம் முட்டையை ஒருபோதும் உண்ணமாட்டேன் என்று சத்தியம் செய்து கொண்டார். ஒரு முறை அவரின் நண்பர் வருகை தந்தபோது நண்பரின் சட்டைப் பையில் ஏதோ ஒரு பொருள் பெரியதாய் இருப்பதைக் கண்டு சத்தியமாய் அது எதுவாக இருந்தாலும் அதை சாப்பிடுவேன் என்று சத்தியம் செய்து கொண்டார். சட்டையை துளாவி அந்த பொருளை எடுத்த போது அது முட்டையாக இருந்தது. சத்தியத்திற்கு அதை உண்ணாமல் இருப்பதா அல்லது உண்பதா இதில் எதை ஒன்றை செய்தாலும் சத்தியம் முறிந்து விடும். இந்த பிரச்சனையை எப்படி தீர்ப்பது பலரை அணுகியும் பலவாறு யோசித்தும் முடிவு எட்டவில்லை. அது பொழுது இமாமுல் அஃளம் அவர்கள் கூறினார்கள். சட்டைப் பையில் இருந்து எடுத்த முட்டையை அடைகாக்கும் கோழி முட்டைகளில் அடையாளப்படுத்தி குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். குஞ்சு பொறித்தபின் அதை ஜபீஹா செய்து உண்டால் பையில் உள்ளதையும் உண்டது போல் ஆகும். முட்டையையும் உண்ணாமல் இருந்ததைப் போல் ஆகிவிடும் என்று தீர்ப்பளித்தார்கள்.

## உஸ்தாதுல் உலமா – ஹதீது கலை வல்லுநர் மௌலானா மௌலவி ஆலி ஜனாப்
## K.N.நூஹ் முஹ்யித்தீன் ஆலிம் ஹஜ்ரத்
## அவர்களுடன் ஓர் நேர்காணல்...

மஸ்லிஸ் உலமாயி அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் தமிழ்நாட்டின் துணைத் தலைவரும் தலை சிறந்த சுன்னத் வல் ஜமாஅத் மார்க்க அறிஞர்களில் ஒருவரும் உஸ்தாதுல் உலமா என்று அவரை நன்கறிந்தவர்கள் மத்தியில் பேசப்படுபவரும் தற்காலத்தில் சிறந்த ஹதீதுகலை நிபுணரும்,தரீகாவில் காயல்பதி ஸுஃபி ஹஜ்ரத் அவர்களிடம் பைஅத் பெற்றவருமான உடன்குடி வாழ் மௌலானா மௌலவி நூஹ் முஹ்யித்தீன் ஆலிம் ஹஜ்ரத் அவர்களிடம் நேர்காணல் ஒன்று தாங்கள் எங்களுக்குத் தரவேண்டும் என விண்ணப்பித்துக் கொண்டபோது அவர்களும், சரி வாருங்கள் என சம்மதம் தெரிவித்ததன் பேரில் அவர்களை சந்தித்துப் பெற்ற பேட்டியை தர்கா இதழ் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியுறுகிறோம்

**- நமது தலைமை நிருபர்**

**முஹம்மத் உஸ்மான் மோத்தி சேட் ரப்பானி - மதுரை**

**நிருபர் :** அஸ்ஸலாமு அலைக்கும்

**ஆலிம் சாஹெப் :** வ அலைக்கும் அஸ்ஸலாம்.

**நிருபர் :** தங்கள் பூர்வீகத்தைப் பற்றி தங்களின் அறிமுகத்துடன் கூறுங்கள்.

**ஆலிம் சாஹெப் :** நாங்கள் சையிதினா குத்புல் அக்தாப் மெய்நிலைக் கண்ட ஞான வள்ளல் கௌதுஸ் ஸமதானி முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வமிசத்தினர். எங்கள் மூதாதையரான அஸ் சையத் அஹ்மத் ஜலாலுத்தீன் அலீ பக்தாதி அவர்கள் சுமார் 700ஆண்டுகளுக்கு முன்னால் இந்த சிற்றூரான உடன்குடிக்கு குடிபெயர்ந்தார்கள், அவர்கள்

அண்ணவர்கள் வமிசத்தினர், காயல் தந்த மாமேதை மாதிஹுர் ரஸூல் சதகதுல்லாஹ் அப்பா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தந்தை ஷைகு சுலைமான் வலியுல்லாஹ், கோட்டைப்பட்டிணம் ராவுத்தார் அப்பா வலியுல்லாஹ், திருமங்களக் குடி மௌலான அபூபக்கர் வலியுல்லாஹ் ஆகிய மாபெரும் விலாயத்து வேந்தர்களின் ஷைகாவார்கள். அந்த பட்டியலில் 9வது தலைமுறையைச் சேர்ந்தவன் நான்.

**நிருபர் :** தங்கள் இளமைக் கல்வியைப் பற்றி கூறுங்களேன்.

**ஆலிம் சாஹெப் :** எங்கள் குடும்பமே தலைமுறை தலைமுறையாய் கதீபுகளாய் இருந்து வந்தவர்கள்.(ஜும்மா குத்பாவை தலைமை ஏற்று நடத்துபவர்கள்) நான் என்னுடைய ஆரம்பக் கல்வியை உடன்குடி குத்பா பள்ளியில் உள்ள மதரஸாவான மதரஸத்துல் முஹம்மதியாவிலேயே பயின்றேன். பின் காயல்பட்டினம் மஹ்ளரத்துல் காதிரிய்யாவில் மேல் ஜும்ராக்களை படித்தேன். பட்டமளிப்பு இல்லாததால் தஹ்ஸீலுக்கு தஞ்சை மாவட்டம் கூத்தாநல்லூரில் உள்ள மதரஸாவில் 1966ல் உலவி ஸனது (பட்டம்) பெற்றேன்.

**நிருபர் :** தாங்கள் ஆசிரியராகப் பணியாற்றியதைப் பற்றி கூறவும்.

**ஆலிம் சாஹெப் :** துவக்கத்தில் நான் திருவிதாங்கோட்டில் உள்ள ஒரு மதரஸாவில் ஆசிரியராக சுமார் நான்கு ஆண்டு காலம் கடமையாற்றினேன். பிறகு கூத்தாநல்லூரிலும், பொதக்குடி அந்நூருல் முஹம்மதியாவிலும், காயல்கட்டினம் மஹ்லரத்துல் காதிரியாவிலும் பின்னர் நாகூர் கொல்லம் பள்ளி மதரஸாவில் ஸதருல் முதர்ரிஸ்ஸாக 3 ஆண்டுகள் பணியாற்றினேன். இடையில் ஒராண்டு இலங்கையில் ஒரு மதரஸாவிலும் ஆசிரியாரா பணியாற்றினேன். பின்பு இறுதியாக தேளந்தூரில் உள்ள மதரஸாவில் பணியாற்றினேன்.

**நிருபர் :** தாங்கள் பைஅத் பெற்றதைப் பற்றி...

**ஆலிம் சாஹெப் :** நான் என்னுடைய ஷைகான மௌலானா மௌலவி அஷ்ஷைகு அப்துல் காதர் காதிரி ஸுஃபி ரஹ்மதுல்லாஹி தஆலா அவர்களை காயல் திருநகரில் சந்தித்தேன். அவர்கள் மீது கொண்ட ஈர்ப்பின் காரணமாக பைத்அத் பெற விருப்பம் தெரிவித்தேன். அவரும் மனம் உவந்து எனக்கு பைஅத் வழங்கினார்கள்.

**நிருபர் :** தற்காலத்தில் வஹ்ஹாபிகள் பல ரூபங்களில் அப்பாவி முஸ்லிம்களை திசை திருப்பி விடுகிறார்களே. அவ்விதமான சூழ்ச்சியிலிருந்து பொது மக்கள் எப்படி விலகிக் கொள்ள வேண்டும் என்று கூறுங்களேன்.

**ஆலிம் சாஹெப் :** பொது மக்கள் வஹ்ஹாபிகளின் பேச்சுக்களை செவியேற்காமல் நமது முன்னோர்களான அம்பியாக்கள் அவுலியாக்கள். வழி நடந்திட வேண்டும். அந்நாதாக்கள் செய்து வந்த நல்அமல்களான மீலாது, மௌலூது, கத்தம், ஃபாத்திஹா, போன்றவற்றை தொடர்ந்து பேணி நடத்திவர வேண்டும். பிள்ளை களுக்கு மார்க்க அடிப்படை கல்விகளை போதிக்க முஹல்லாக்களில் தகுந்த ஏற்பாடு களை செய்ய வேண்டும். இவ்வித முயற்சிகளால் வஹ்ஹாபிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கலாம்.

**நிருபர் :** மதரஸாக்களில் பணியாற்றும் ஆலிம்களுக்கு தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்.

**ஆலிம் சாஹெப் :** மார்க்கத்திற்காகவும், சமூகத்திற்காகவும் இவர்கள் பணி மதரஸாக்களில் தர்ஸு பாடங்கள் நடத்தும் இவர்களின் பணி மகத்தானது. எதிர்கால மணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர் களாகவும் உண்டாக்கும் பணி இது. குறிப்பாக மார்க்கத்தில் ஷரீஅத்தை போதித்துத் தரும் அதே வேளையில் அகீதா கொள்கைகளான சுன்னத் வல் ஜமாஅத்தின் அடிப்படைகளையும், வஹ்ஹாபிகளின் விதண்டாவாத நடைமுறைபற்றியும் குர்ஆன், தஃப்ஸீர், ஹதீஸ், தலீல், அகாயித், மன்திக், ஷர்ஹு போன்றவற்றை தெளிவாகவும், வஹ்ஹாபிகளின் வரலாற்றை விரிவாகவும், மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து பஹஸ், முபாஹிஸா தர்கக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாக இன்றைய சூழ்நிலைக்கு தகுந்த முறையில் கற்றுத் தரவேண்டும். அதற்காக முதர்ரிஸுகள் முதாஅலா என்ற பல நூல்களை வாசித்து தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். நுல்களை வாசிக்கும் பழக்கம் இன்று ஆசிரியர்களிடமே குறைந்து வருவது கவலைக்குரிய விஷயமாகும்.

**நிருபர் :** தர்கா இதழுக்கு தங்கள் அறிவுரை...

**ஆலிம் சாஹெப் :** தர்கா இதழ் ஒரு நல்ல முயற்ச்சி. தோய்வில்லாமல் வெளிவர வேண்டும். மக்களிடம் அதிகம் சேர நிர்வாகம் முயற்ச்சி மேற்கொள்ள வேண்டும். அதன் வளர்ச்சிக்காக தர்கா வலிமார்களின் சன்தானத்தில் துஆ செய்கிறேன்.

**(ஆலிம் சாஹெப் அவர்கள் உடல் நிலை பாதிப்பிலும் நம் இதழுக்கு பேட்டி தந்தமைக்கு பணிவான நன்றியை உரித்தாக்குகின்றோம்.)**

## வாசகர் கடிதம்...!

**✉ எஜமான் பாதுஷா நாயகத்தின் உருஸ் அழைப்பு...!**

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. மதிப்பிற்குரிய ஜனாப் சையது அஹ்மது அவர்களின் சமூகத்திற்கு நாகூர் நாயகம் அவர்களின் குலவழித் தோன்றல் செய்யது அபுல் பதஹ் சாஹிபுவின் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ. தர்கா இதழ் கிடைத்தது. பல அபூர்வ செய்திகள் நிறைய கண்டேன். இதுபோல் மென்மேலும் தங்களின் சேவைகள் தொடர எங்கள் பாட்டனார் பாதுஷா நாயகம் அவர்களின் உயர் தர்பாரில் இருந்து துஆ செய்தவண்ணம் இருக்கிறேன். அடுத்து வரும் இதழ் மே மாதம். மே மாதம் தான் பாதுஷா நாயகம் அவர்களின் புனித உரூஸ் கந்தூரி. இவ்விழாவில் தாங்கள் கலந்து கொள்ள வர கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் பாதுஷா நாயகம் அவர்களின் தரஜாவைப் பற்றி சிறு சம்பவங்களை கோர்வை செய்து அனுப்பி உள்ளேன். அதனை மே மாத இதழில் பிரசுரிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். வஸ்ஸலாம்!

**தங்களின்**
**அபுல் பத்தாஹ் சாஹிப்**
***16.03.2011***

## நாகூர் நாயகத்தின் மகிமை...!

அகிலத்தின் அருட்கொடை அண்ணல் நபி ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் மறைவு தினத்தை அறிந்த பூமி, வல்ல இறைவனிடம் யா அல்லாஹ் உன் இறுதி தூதர் பயகம்பர் ரஸூல் நாயகம் அவர்கள் அவதரிப்ப தற்கு முன் பூமியான என் முதுகில் மீது பல அநியாயங்கள் நடந்து ரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது. உன் இறுதி தூதர் நாயகம் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவதரித்த பின் என் முதுகின் மீது எவ்வித குழப்பங்களும், அநீதிகளும் நடை பெறாமல் நிம்மதியாக இருந்தேன். ஆனால் நீயோ உன் தூதரை உன்னிடம் அழைத்துக் கொள்ள இருக்கிறாய். அமைதியாக இருந்த என் மீது மீண்டும் குழப்பங்களும், அநீதிகளும் ரத்த ஆறுகளும் ஓடுமே என்று பூமி கண்ணீர் விட்டு இறைவனிடம் மன்றாடியதாம். அதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் என் நேசரை என் அர்ஷில் பொருத்தி அழகு பார்க்கப்போகிறேன். பூமியே கவலைப்படாதே என் நேசரின் வழியில் எண்ணற்ற நல்லவர்களான இறைநேச செல்வர்களை உன் முதுகின் (உலகம் பூராவும்) தவழவிடுவேன், அவர்கள் மூரம் நீ சாந்தியும், சமாதானமும் அடையலாம் என்று இறைவன் பூமியிடம் கூறியதாக நாகூர் நாயகம் அவர்களின் மௌலூது ஹிக்காயத் ஷரீஃபில் மஹ்மூது தீபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாக தெளிவுபட உள்ளது.

எந்த இறைநேசச் செல்வர் களான வலிமார்களும் செய்யாத, மாணிக்கபூரில் அவதரித்து உலகத்தின் பல பாகத்திற்கும் கால் நடையாகவும், கட்டுமர வாயிலாகவும் 404 தபோதினர் களுடன் வலம் வந்து அவர்களின் ஹிக்காயத் ஷரீஃபில் உள்ளது போல் பூமி எங்கும் தீனைப் பரப்பி மதங்களை கடந்து மனித மனங்களில் வாழும் பாருலம் போற்றும் பாதுஷா தென்கிழக்கு ஆசியாவின் ஆன்மீக ஜோதியான நாகூர் நாதரின் வருடாந்திர புனிதமும், புண்ணியமும் மிக்க உரூஸ் நன்னாள் இந்த மே மாதம் *15.04.2011* நடத்தப் பட உள்ளது. இந்த மகத்துவ மிக்க நன்னாளில் அவர்களை நாடி வந்த பெரியோர்கள், வலிமார்களைப் பற்றி பார்ப்போம். அல்லாமா சதகதுல் லாஹ் காஹிரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கீழக்கரையில் இருந்து கால் நடையாக நாகூர் நாயகம் அவர்களின் உரூஸ் நன்னாளில் ஆஜராகி,

**கருவூரில் தரிக்கு முன்னே**
**குருவுக்கும் குருவானவா**

அன்னை கருவில் ஞானத்தை பெற்றவா.

என்று அரபியில் கசிதா ஓதி புகழ்ந்தார்கள். பரங்கிப்பேட்டையில் அடங்கி இருக்கும் மஹ்மூது தீபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தன்னிலை உணர என் குருவாய் வந்தவா.

தன்னிலை அருள்வோருக்கு முன்னிலையானவா என்றும் தங்கள் பிரதான வாயிலுக்கு வந்து கையேந்தி வெறுங் கையானவர் யார் என்று புகழ்ந்து கூறுகிறார்கள். மேலும் புகழ் பேசி திரிவோருக்கும் அருள் கொடுப்பீர். இகழ் பேசி திரிவோருக் கும் பொருள் கொடுப்பீர், நாயகமே என்று போற்றி புகழ்கிறார்கள்.

இதை தான் ஒரு பெரியவர் அவர்கள் பஞ்ச காலம் வந்து ஆட்டினும் சஞ்சல கடல் வந்து சூழினும் தஞ்சம் உமது பாதம் அல்லாது வேறில்லை காதிரு என்றும் நாதரே! என்றும் தன் கவலை தீர மன்றாடுகுறார்கள். இந்தியாவில் முதல் முதலாக போர்ச்சுகீசியர்களை எதிர்த்து வேதாளை என்ற இடத்தில் *404* தபோர்களை வழி நடத்தி போர் புரிந்தார்கள். நாகூர் பாதுஷா நாயகம். இதனை தான் அல்லாமா ஸதக்கத்துல் லாஹ் காஹிரி ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் படைக்கு நடுங்கா நெஞ்சம் கொண்டவா என்று கூறுகிறார்கள்.

இதனை தான் கீழக்கரை சுஹைபு ஆலிம் அப்சலுல் உலமா அவர்களும் போர்ச்சுகீசியர் வருகைக்கு முன்னும் பின்னும் என்ற நூலில் அஜ்மல் கான் என்கிற மதுரையை சேர்ந்த புரபசர் அவர்கள் விரிவாக எழுதியுள்ளார்கள். இதனை மேற்கண்ட புத்தகத்தில காண்க.

அல்லாமா அருஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பாதுஷா நாயகம் அவர்களின் பிரதான வாயிலில் நின்று தனக்கு இரண்டு பிள்ளை வேண்டும் என்றும், இரண்டு பிள்ளைகளுக்கு தங்களின் திரு நாமத்தை தான் சூட்டுவேன் என்றும் மன்றாடி கேட்டு இரண்டு பிள்ளைகளை பெற்றார்கள். இவர்கள் தான் தெற்கே கொண்டாடப்படும் கல்வத் நாயகம், ஜல்வத் நாயகம் ரஹ்மதுல்லாஹி அலைஹிமா.

கோட்டை பட்டினத்தில் அடங்கி விளங்கும் ஹஜ்ரத் ராவுத்தார் அப்பா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் நாகூர் ஷரீஃப் வந்து பாதுஷா நாயகம் அவர்கள் சந்நிதியில் துஆ கேட்டுவிட்டு சின்ன எஜமான் என்று கூறக்கூடிய பாதுஷா நாயகம் அவர்களின் அருந்தவப் புதல்வர் செய்யது முஹம்மது யூசுப் சாஹிபு ரஹ்மதுல்லாஹி அலைஹி நாயகத்தின் வாயிலில் இருந்து இரு கையேந்தி துஆ கேட்ட போது எஜமான் பாதுஷா நாயகம் தன் பொன்னுடம்பில் போட்டு இருந்த சின்ன எஜமான் வாசலில் தொங்கவிடப்பட்டுள்ள சங்கிலி, ரவுத்தர் அப்பா அவர்கள் கையில் பட்டவுடன் அவர்களுக்கு விலாயத் கிடைத்ததாக அவர்களின் சரித்திரத்தில் காணலாம். இது போல் நாடாளும் மன்னர்கள் மற்றும் பல லட்சம் பேர்கள் போற்றி கொண்டாடும் நாகூர் நாயகம் அவர்களின் ஆசி துஆ பரகத் இந்த நான்னாளில் அனைவர்களுக்கும் உரித்தாக ஆமீன்...

மகத்துவமும் மகிமையும் மிக்க பாதுஷா நாயகம் அவர்களின் உயர் தர்பாரில் இருந்து துஆ செய்து கொண்டு இருக்கிறேன். **தொகுப்பு**

**செய்யது அபுல் பதஹ் சாஹிபு**
**தர்கா டிரஸ்டி, நாகூர் ஷரீஃப்**

### தர்கா இதழில் என்னை கவர்ந்த அம்சங்கள்...

அன்பு சகோதரர் ஜனாப் சையத் அஹமது (ஆசிரியர் சாஹெப் தர்கா இதழ் அவர்களுக்கு எனது ஸலாத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் பெயர் அக்பர் அலீ ஹக்கிய்யுல் காதிரி. நான் திருச்சி மாநகரை சேர்ந்தவனும் சாஹெப் தர்கா இதழின் வாசகரும் ஆவேன். குறிப்பிட்டுக் கூற வேண்டுமென்றால் சுமார் 7-8 மாதங்களுக்கு முன்பு உங்களை சஹெப் தர்கா அலுவல கத்தில் எனது நண்பர் (கிப்லா மாத இதழின் ஆசிரியர் ஜனாப் அப்துஸ் ஸலாம் ஹக்கிய்யுல் காதிரி ஆலிம் அவர்களின் மகனார்) முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரியுடன் வந்து சந்தித்துள்ளேன்.

கடந்த மாதம் சாஹெப் தர்கா இதழை கண்டேன். மாஷா அல்லாஹ்! புதிய தகவல்கள் - பல்சுவை கட்டுரைகள் - மிக பயனுள்ள விளக்கங்கள் - மார்க்க சட்ட விதிமுறைகள் - ஜியாரத்தின் தகவல்கள் - உரூஸ் செய்திகள் என்று அனைத்து விஷயங்களும் பிரமாதம் - பிரமிப்பு - படிப்பினை.

அது சிறந்தது - இது சிறந்தது என்று எதையும் ஒதுக்க முடியாது. சாஹெப் தர்கா இதழின் முதல் பக்கம் முதல் இறுதி பக்கம் வரை அத்துனை விஷயங்களிலும் சுவாரசியம் - சுவை - சுய சிந்தனை - சுன்னத் வல் ஜமாஅத் அகீதா என்பவை விரவிக்கிடக் கின்றன.

**சாஹெப் தர்காவில் என்னை மிக மிக கவர்ந்தது இரண்டு.**

1.அகிலத்தின் அருட்கொடை கண்மணி நாயகம் ஈருலக இரட்சர் தாஹா நபி ஸல்லல் லாஹு அஹைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் மேன்மைமிக்க பரிசுத்த திருக்குடும்பத்தினர் அஹ்லுல் பைத்தினர்கள் மீதும் உங்கள் இதழில் தொடர்ந்து வெளிவரும் அழகான ஆழமான கட்டுரைகள் - வரலாற்று சம்பவங்கள் மற்றும் பயான்கள் அண்ணலார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும் அஹ்லுல் பைத்தினர்கள் மீதும் தீரா காதல் கொண்ட என்னைப் போன்றவர்களின் கல்புகளை நிறையவும் குளிரச் செய்கின்றன.

2. தான் யார் - என்ன ? எதை - எதற்காக செய்கிறோம்? என்று தெரியாமல், பாதை மாறி அநீதியாகவும் அநியாயமாகவும் முஸ்தஃபா நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்களை தூற்றியும், எதிர்த்தும் (நவூதுபில்லாஹ்) அறிவு குலைந்து கேடுகெட்ட வாழ்வை கழித்துக் கொண்டிருக்கும் வஹ்ஹாபிய வன்காஃபிர்களுக்கும் தப்லீக் முனாஃபீகீன்களுக்கும் தாங்கள் தரும் ஒவ்வொரு சாட்டையடி தான் என்னை மிகவும் கவந்த இரண்டு அம்சங்கள்.

**மேலும் சென்ற இதழில் :**

◆ அண்ணலெம் பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு 40 வயதில் அல்ல அவர்கள் பிறப்பதற்கு முன்பிலிருந்தே நபியாகவும், ரஸூலாகவும் இருந்தார்கள் என்ற விளக்கம் - ஆஹா உண்மை அற்புதம்.

◆வலிமார்கள் பேசுகிறார்கள்.

◆ சண்டாளன் எஜீது ( லஅனத்து ) காஃபிராகிப் போன ஆதாரங்கள்.

◆ஓமன் நாட்டில் புனித ஜியாரத்தின் தொகுப்பு

◆ அன்னை ஆமினா, தந்தை அப்துல்லா, முஃமின்களே என்று கூறும் ஆதாரப்பூர்வ தொகுப்பு ஆகிய அனைத்தும் மிக அற்புதம் - அருமை.

◆ ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அன்போடு குறிப்பிட ஆசைப்படுகிறேன். சென்ற இதழில் பக்கம் 9 ல் மாநபியின் மணிமொழிகள் என்னும் தலைப்பின் கீழ் நீங்கள் பிரசுரித்துள்ள ஒரு பிழையை மட்டும் இங்கு சுட்டிக் காட்ட எத்தனிக்கிறேன். 12 இமாம்கள் என்னும் உட்தலைப்பிற்கு கீழ் நீங்கள் குறிப்பிட்டுள்ள சங்கைக்கும், மேன்மைக்கும், புனிதத்திற்கும் உரிய அஹ்லே பைத்தினர்களின் திருநாமங் களில் ஓரிரு இடங்களில் தவறாகப் போடப்பட்டுள்ளது. மேலும் அத்திருநாமங்களை முழுமையாக எழுதாதது தான் அந்த குறை.

1.சையிதுனா இமாம் அலீ இப்னு அபீதாலிப் அல் முர்தளா கர்ரமல்லாஹு வஜ்ஹு. 2. சையிதினா இமாம் ஹஸன் அல் முஜ்தபா அலைஹிஸ் ஸலாம். 3. சையிதினா இமாம் ஹுஸைன் அஷ் ஷஹீது அலைஹிஸ் ஸலாம். 4. சையிதினா இமாம் அலீ ஜைனுல் ஆபிதீன் / அஸ்ஸஜ்ஜாத் அலைஹிஸ் ஸலாம். 5.சையிதினா இமாம் முஹம்மத் அல்-பாக்கர் அலைஹிஸ் ஸலாம். 6.சையிதினா இமாம் ஜாஃபர் அஸ் ஸாதிக் அலைஹிஸ் ஸலாம். 7.சையிதினா இமாம் மூஸா அல் காளிம் அலைஹிஸ் ஸலாம். 8.சையிதினா இமாம் அலீ அர் - ரிதா அலைஹிஸ் ஸலாம். 9. சையிதினா இமாம் முஹம்மத் அத்-தகீ/ அல்-ஜவ்வாத் அலைஹிஸ் ஸலாம். 10. சையிதினா இமாம் அலீ அன்-நகீ/ அல்-ஹாதி அலைஹிஸ் ஸலாம். 11. சையிதினா இமாம் ஹஸன் அல்-அஸ்கரி அலைஹிஸ் ஸலாம். 12. சையிதினா இமாம் முஹம்மத் அல்-மஹ்தி.

இவ்விஷயத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து விட்டேன் என்பதில் மிக்க மகிழ்ச்சி. சாஹெப் தர்காவின் பணி மேலும் உயரவும், என்றென்றும் சிறக்கவும் பரிபூர்ண ஹக்கை வேண்டியவனா கவும் இத்துடன் நிறைவு செய்கிறேன்.

**வாழ்க மெய்ஞானம், வாழ்க முஸ்தஃபாவின் புகழ்**

**வீழ்க அஞ்ஞானம்!! வீழ்க வஹ்ஹாபிகள்!!**

**வஸ்ஸலாம்!**

**அக்பர் அலீ ஹக்கிய்யுல் காதிரி ,**
**கருமண்டபம், திருச்சி.**

## தஞ்சை ஹஜ்ரத் ஷம்ஸ் மன்சூர் பீர் வலியுல்லாஹ் கந்தூரி விழா

ஹஜ்ரத் குத்புல் அக்தாப் சையதுஸ் ஸாதாத் சையதினா ஹஜ்ரத் ஷம்ஸ் மன்சூர் பீர் வலியுல்லாஹ் கத்தஸல்லாஹு ஸிற்றஹு அவர்களின் தர்கா ஷரீபில் பெரிய கந்தூரி விழா எவ்வருஷத்திலும் இல்லாது இவ்வருஷம் அதிவிமரிசையாய் தர்காவின் அதீன வம்சத்தாரால் மிக சிறப்பாக நடத்தப்பட்டது.

கந்தூரி விழா 5.04.2011 செவ்வாய்க் கிழமை தொடங்கி 23.04.2011 சனிக்கிழமை வரை மிக விமரிசையாக தர்காவின் ஆதீன வம்சத்தார்களாகிய போர்ட் ஆப் டிரஸ்டிகள் S.சையத் அல்லாபக்ஷ், டிரஸ்டி. K.காதர் பாட்சா, டிரஸ்டி. M.S.முகமது ஹாபிஸ் குறைஷி சாயபு, டிரஸ்டி. M.முபாரக் அலிகான், டிரஸ்டு போர்டு காரியதரிசியும், போர்டு ஆப் டிரஸ்டியும், கலீபா கலந்தர் அலிஷா திவான் (alais)S.சையத் அக்பர் ஆகியோரின் மேற்பார்வை மற்றும் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றது.

வண்ணைக்காதர் அவர்களின் (கவ்வாலி) நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கந்தூரி விஷே நாட்களில்21.04.2011 அன்று சந்தனம், பூ சாதர் வகையறா சர்கிறோஷ் ஜாகையிலிருந்து ஊர்வலம் வந்து காலை 4 மணிக்கு ஹஜ்ரத் அவர்களின் ரவ்லா ஷரீஃபுக்குச் சந்தனம் பூசுதலும், பாத்திஹாவும் நடைபெற்றது.

மேற்படி அனைத்து கந்தூரி விசேஷ நாட்களில் மக்கள் திரளாக கலந்து கொண்டு ஹஜ்ரத் அவர்களின் துஆ பரக்கத்தைப் பெற்றுச் சென்றார்கள்.

# நபிகளாரின் ( தர்கா - ரௌளா ஷரீஃப் ) முன் ஆஜராகி என்னிடம் (அல்லாஹ்விடம்) மன்னிப்பு கேளுங்கள் என அல்லாஹ் இட்ட கட்டளை...!

## பழமை வாய்ந்த அல் அஸ்ஹர் இஸ்லாமிய பல்கலைகழகத்தில் வழங்கப்பட்ட விரிவான மார்க்கத் தீர்ப்பு...!

وَلَوْ اَنَّهُمْ اِذْظَّلَمُوْااَنْفُسَهُمْ جَائُوْكَ فَسْتَغْفَرُوْا اللّٰهَ وَاسْتَغْفَرَلَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُوْااللّٰهَ تَوَّاباً رَّحِيْماً

அல்லாஹ் தன் திருமறையில் முஃமின்கள் ஏதும் பாவம் செய்து விட்டால் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்க பெருமானாரின் திரு சமூகத்தில் ஆஜராகி தன்னிடம் மன்னிப்புக் கேட்க ஆணையிடுகிறான் என்ற கருத்துப்பட மேற்கண்ட குர்ஆனின் ஆயத்து உள்ளது.

அப்படியானால் கேள்வி எழுவது என்னவென்றால் இந்த ஆயத்தின் படி நபிபெருமானாரின் திரு சமூகத்தில் ஆஜராக வேண்டும் என்ற கட்டளை கண்மணி நாயகத்தின் உலகாதார வாழ்வு காலம் மட்டுமா? அல்லது கியாம நாள்வரை இந்த ஆயத்தின் கட்டளை செல்லுமா என்பதை விரிவான விளக்கத்துடன் ஃபத்வா வழங்கவும்.

**பதில் :** மேற்கண்ட கேள்விக்கு விளக்கம் என்னவெனில் முழு ஆயத்தில் எந்த இடத்திலும் குறிப்பிட்ட கால நிலை குறித்து கட்டளையிடப் படவில்லை என்பது வெள்ளிடை மழை. இந்த ஆயத்தில் ஈமான் கொண்டு விசுவாசிக்கும் அனைவருக்கும் கியாம நாள்வரை தொடர்ந்து இடப்பட்ட கட்டளையாகும் என்பதை ஆயத்தே நிரூபிக்கிறது. இந்த ஆயத்தின் எந்த வார்த்தையும் பெருமானாரின் ஜீவாதார வாழ்கை காலத்தில் மட்டும்தான் இது செல்லும் என்று அல்லாஹ்வால் கூறப்படவில்லை என்பதால் மறுபடியும் இந்த ஆயத்தை ஓதி அர்த்தத்தை படித்துப் பாருங்கள்.

இப்போது நாம் இலக்கிய இலக்கணங்களோடும், ஸாஹாபாக்கள், இமாம்கள், அவுலியாக்கள் ஆகியோர் முஃபஸ்ஸிரீன்களான குர்ஆன் விரிவுரையாளர்களின் கூற்றுகளை ஆதாரப்பூர்வமாய் அடுக்கி நபிகளாரின் திருமுன் (ரௌளா ஷரீஃப் முன்) இன்றும் சென்று நின்று மன்னிப்பு கேட்டுப் பெறுவதுதான் சரியான முறை என்று நிரூபிப்போம்.

اَلْعِبْرَةُ لِعُمُوْمِ اللَّفْظِ لَابِخُصُوْصِ السَّبَبِ

என்பது பொதுப்படை சட்டமாகும். அதாவது பொதுப்படையாக அமைந்த வார்த்தையை கால அவகாசத்தில் கட்டுப்படுத்தக் கூடாது என்பது நியதியாகும்.

யாராவது ஒருவர் பெருமானாரின் உலக வாழ்நாள் காலம் மட்டும் தான் இந்த ஆயத்து செல்லுபடியாகும் என்று வாதிடுவா ரேயானால் அவர் மேற்கண்ட பொது சட்டத்தை புறக்கணிக்கிறார். வேறு புதிய சட்டத்தை அவர் நமக்கு காட்டவேண்டும். பொதுவாக வரும் சட்டம் என்னவெனில்...

ان المطلق يجرى على اطلاقه

(பொது நியதி எந்த காலத்திற்கும் கட்டுப்படாதது) அது தன் நிலையிலேயே இருக்கும் என்பதாகும். அதே போல் பொதுவான ஒரு பொருள் பொதிந்த கருத்து காலக்கட்டத்தினால் கட்டுப்படுத்த படமாட்டாது என்பது குர்ஆன் விரிவுரையாளர்களான முஃப்பஸ்ஸிரீன்களின் ஏகோபித்த முடிவாகும்.

பெரும்பான்மையான குர்ஆன் தஃப்ஸீர் விரிவுரையாளர்கள் மேற்கண்ட ஆயத்தின் விளக்கத்திற்கு முக்கிய சம்பவமாக இந்த சம்பவத்தை தான் ஆதாரமாகச் சேர்க்கிறார்கள்.

இமாம் இப்னே கஸீர் தமிஷ்கி அவர்கள் இந்த ஆயத்தின் விளக்கத்திற்கு கீழ்கண்ட வரலாற்றுச் சம்பவத்தை குறித்துக் காட்டுகிறார்.

மேலும் பல மார்க்க மேதைகளான அறிஞர் பெருமக்கள் தத்தமது நூல்களில் இதையே குறித்துக் காட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக ஷைகு அபூன்நஸர் அஸ்ஸபக் தன்னுடைய அஷ்ஷமாயில் என்ற கிரந்தத்திலும் இமாம் அதபி அவர்கள் மூலமாக இந்த ரிவாயத்தை பதிவு செய்கிறார்கள்.

### உயிரோட்டமான வரலாற்றுச் சம்பவம்

ஒரு முறை நான் ( இமாம் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அதபி) மஸ்ஜிதுன் நபவியில் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனித ரௌளா ஷரீஃபுக்கு முன் அமர்ந்திருந்தேன். ஒரு கிராமத்து அரபி ஒருவர் வருகை புரிந்தார். ரௌளா ஷரீஃபின் மணம் வீசும் மண்ணை எடுத்து தன் தலையில் இட்டுக் கொண்டவராக நல்ல முறையில் நின்று சலாம் பைத்து ஓதினார். சிறப்பாக மன்றாடி இப்படி துஆ வேண்டினார். ***ஃபிதாக அபீ வ உம்மி யா ரஸூலல்லாஹ்!***

யாரஸூலல்லாஹ்! என் தாய் தந்தை தங்களின் மீது அர்ப்பணமாகட்டும். அல்லாஹ் தங்கள் மீது வஹீ இறக்கி வைத்தான். அதில் தங்கள் முன்னோர் பின்னோர் கள் பற்றிய ஞானத்தை வழங்கினான். மேலும் தித்திக்கும் தன் திருமறையில்

وَلَوْ اَنَّهُمْ اِذْظَّلَمُوْااَنْفُسَهُمْ جَائُوْكَ فَسْتَغْفَرُوْا اللّٰهَ وَاسْتَغْفَرَلَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُوْااللّٰهَ تَوَّاباً رَّحِيْماً

என்னும் வசனத்தின் கட்டளைப்படி நான் செய்த பாவங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்பு - ஷஃபா அத்து வேண்டியவனாக தங்களின் சமூகம் ஆஜராகி நிற்கிறேன். தங்களின் இத்திரு சன்னிதானத்தில் தான் அல்லாஹ் பாவமன்னிப்பு வழங்கு வதாக அறிவுறுத்தியுள்ளான் என துஆ கேட்டவராக இம் மௌலூது பாக்களை ஓதினார்.

يَا خَيْرَ مَنْ دُفِنَتْ بِالْقَاعِ اَعْظُمُهُ
فَطَابَ مِنْ طِيْبِهِنَّ الْقَاعُ وَالْاَكَمُ
اَنْتَ النَّبِيُّ الَّذِىْ تُرْجٰى شَفَاعَتُهُ
عِنْدَ الصِّرَاطِ اِذَامَازَلَّتِ الْقَدَمُ
نَفْسِى الْفِدَاءُ لِقَبْرٍاَنْتَ سَاكِنُهُ
فِيْهِ الْعَفَافُ وَفِيْهِ الْجُوْدُ وَالْكَرَمُ

ஓ! நறுமணங்கள் வீசும் புனித பூமியே! உன்னிடத்தில் தான் உலகில் உச்சத் தலைவர் இருக்கிறார்...

புல் ஸிராத்து பாலத்தில் கால்கள் தள்ளாட்டம் காணும்போது தங்களைத் தவிர எங்களைக் காத்து கரைசேர்க்க யாருள்ளார்?

என் உயிரை தங்களுக்கு தத்தம் செய்கிறேன்,
ஏனெனில் அதில் நான் எனக்கு பரிசுத்தமும், பரவசமும் காண்கின்றேன்.

இப்படி உள்ளம் உருகி கவிதையில் வேண்டுதல் புரிந்த வண்ணம் அந்த கிராமத்து அரபி ஒட்டகம் ஏறி புறப்பட்டுச் சென்றார்.

... நிச்சயமாக எந்த சந்தேகமும் இன்றி அதபி ஆகிய நான் சத்தியமிட்டுக் கூறுவது என்னவென்றால் அவ்வரபி அல்லாஹ்வின் பாவமன்னிப்பை பெற்றுச் சென்றிருக்கிறார்.

அது எப்படி என்பதை இச்சம்பவத்தின் தொடராக தெளிவான அத்தாட்சியைப் பாருங்கள். இமாம் முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அதபி தான் கண்ட காட்சியை இப்படி கூறுகிறார்.

இந்த கிராமத்து அரபியின் செயலைப் பார்த்தபின் நான் அங்கேயே கண்ணயர்ந்து போனேன். கனவிலே நபிகள் கோமான் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்காட்சி காணப் பெற்றேன். நாயகத் திருமேனி திருவுளமானார்கள்.

يَاعَتَبِى الحق العرابى فَبَشِّرُهُ اَنَّ اللّٰهَ غَفَرَلَهٗ

ஓ அதபியே! நீவீர் விரைந்து சென்று அவ்வரபியைச் சந்தித்து இச் சுபச் செய்தியை அறிவிப்பீராக! அல்லாஹு தஆலா அந்த கிராமத்து அரபியை மன்னித்துவிட்டான் என்று கூறுவீராக. நானும் அப்படியே செய்தேன் என்று கூறினார்கள் இமாம் அதபி அவர்கள்.

இமாம் இபுனு கஸீர் இச்சம்பவத்தைக் கொண்டு இந்த சம்பவமானது, அந்த வசனத்திற்கு ஆதாராப் பூர்வமான நடைமுறை விளக்கமாகும் என்றார்கள்.

இரண்டாவதாக பெருமானாரின் ரௌலா ஷரீஃபுக்கு வருகை புரிந்த அரபி நபிகள் கோமான் நம் அகக் கண்களை விட்டு மறைந்த போதும் அவர்களின் தர்கா-ரௌலா சன்னிதானத்தில் இந்த வசனத்தின் படி மன்னிப்பு கேட்பது கூடும், அது நிறைவேறும் என்பதையும் நிரூபித்துள்ளார்.

மூன்றாவதாக மாபெரும் மார்க்க மேதையான இமாம் அதபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அந்த கிராமத்து அரபியை பெருமானாரின் தர்காவில், கப்ருக்கு முன் இவ்வாறு செய்வதை (இன்றைய தப்லீகு தேவ்பந்து வஹ்ஹாபிகள் போல் )தடுக்கவுமில்லை.

மேலும் ஷரீஅத் சட்டத்தை கரைத்துக் குடித்த மார்க்க மாமேதைகளான அறிஞர் பெருமக்கள் பெருமானாரின் ரௌலா ஷரீஃபை ஜியாரத்து செய்யும் போது இந்த குர்ஆனின் ஆயத்தை ஓதி துஆ கேட்பது மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்ட முஸ்தஹப்பான சட்ட செயல்முறையாகும் என ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார்கள். இந்த வசனத்திற்கு நான்கு மஜ்ஹபுகளின் இமாம்கள் வழங்கும் மார்க்க ஃபத்வாக்களை பின் வருமாறு தொகுத்துத் தருகிறோம்.

**1. ஹனஃபி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் ஃபத்வா :**

மேற்கண்ட ஆயத்தைப் பற்றி ஹனஃபி மத்ஹபின் உலமாக்கள் கியாமநாள் வரை இந்த ஆயத்தில் வந்துள்ள உத்திரவு நிலைத்திருக்கும். இந்த ஆயத்தை கண்மணி நாயகத்தின் புனித கபுறு ஷரீஃபின் ஜியாரத்துக்குச் செல்லுகையில் ஒவ்வொருவரும் இவ்வாயத்தை ஓதி, துஆ கேட்பது முஸ்தஹப்பாகும் என்கிறார்கள்.

பெருமானாரின் ரௌலா ஷரீஃபின் ஜியாரத்தில் எவ்விதம் கண்ணியம் பேண வேண்டும் என்ற தலைப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்கள்.

ثُمَّ يَقِفُ عِنْدَ رَأسِهِ صَلّى اللّٰهُ عَلَيْهِ وَ سَلّمُ

كا الاوَّل و يَقُوْلُ

பெருமானாரின் ரௌலா ஷரீஃபின் தலைமாட்டு புறத்தில் நின்று இப்படி ஓதி, துஆ கேட்க வேண்டும்

اللّٰهُمَّ اِنَّكَ قُلْتَ وَقَوْلُكَ الْحَقّ

وَلَوْ اَنَّهُمْ اِذْظَّلَمُوْا اَنْفُسَهُمْ جَائُوْكَ فَسْتَغْفَرُوْا

اللّٰهَ وَاسْتَغْفَرَلَهُمُ الرَّسُوْلُ لَوَجَدُوْا اللّٰهَ تَوَّاباً

رَّحِيُماً

***ஆதாரம் : அல் ஃபதாவாயே ஹிந்தியா, லி ஜுன்னதி பி ரியாஸதி நிஜாமுத்தீன் பல்கி, பாகம் 1, பக் 266, தாருல் ஃபிக்ரு, பெய்ரூத் அச்சு.***

**2.மாலிகி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் ஃபத்வா :**

இப்புனித நடைமுறையைப் பற்றி மாலிகி மத்ஹபைச் சார்ந்த இமாம் இப்னு அல்ஹாஜ் அல் அப்தரி அல்மாலிகி எழுதுகிறார்கள். ரஸுலுல்லலாஹ்வின் ரவ்ளா ஷரீஃபிற்கு ஜியாரத்திற்குச் செல்வீர்களேயானல் பெருமானாரை தாம் கேட்கும் துஆவில் வஸீலாவாக்கி அவர் பொருட்டாலேயே துஆ கேட்க வேண்டும். ஏனெனில் அப்புனித இடம் தான் தவறுகளையும், பாவங்களையும் விட்டு மன்னிப்பு வாங்கி வழங்கும் இடமாகும். மேலும் ரஸுலின் ஷஃபாஅத்தின் பரக்கத்தும், பெருமானாரின் மேன்மை மிகு அந்தஸ்தின் முன்னால் நம்முடைய பாவங்களும், பிழைகளும், ஒரு பொருட்டே அல்ல.

எனவே யார் ரஸுலின் புனித ரௌலாவை ஜியாரத்து செய்யச் செல்வார்களோ, அவர் பெருமானாரிடம் ஷஃபாஅத்து வேண்டி அவர்களை வஸீலாவாக்கி அல்லாஹ்வின் திருமுன் இருந்து துஆ கேட்க வேண்டும். யா அல்லாஹ் பெருமானாரின் ஷஃபாஅத்து மன்றாட்டல் பெறுவோர்களிலிந்து எங்களை தனிமைபடுத்திவிடாதே. யார் இந்த அகீதா இல்லாமல் துஆ கேட்பார்களோ அவர்கள் இந்த ஷஃபாஅத்திலிந்து தங்களை விடுவித்துக் கொண்ட வழிகெட்டவர்களாகவே கருதப்படுவார்கள். என்ன அவர்களுக்கு அல்லாஹ்வின் இந்த ஆயத்தின் விளக்கம் புரியவில்லையா?

எனவே எவரொருவர் பெருமானாரின் ரௌலாவிற்கு ஜியாரத்திற்குச் சென்றாலும் நபிகளாரை நம்பிக்கையோடு வஸீலாவாக்கினால் நிச்சயமாக அல்லாஹுதஆலா பாவமன்னிப்பு வழங்குவான். ஏனெனில் ரஸுலின் அடிமைகளான நமக்கு அல்லாஹ் வாக்களித்திருக்கிறான், **நீங்கள் பாவமன்னிப்பு வேண்டி நபிகளாரின் திரு சன்னிதானத்தில் வந்து துஆ கேட்பீர்களேயானால் நான் மன்னித்து விடுவேன்** என்பதாக.

ஆகவே அல்லாஹ்வின் மீது விசுவாசம் கொண்ட எந்த முஃமினுக்கும் ரஸுலின் திரு சன்னிதானம் தான் பாவமன்னிப்பு வழங்கும் புண்ணிய ஸ்தலம் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. ஆனால் அல்லாஹ்வின் மீதும் அவனது ரஸுலின் மீதும் அவநம்பிக்கை கொண்ட (வஹ்ஹாபிய) ஜமாஅத்துகளே சந்தேகம் கொள்வோர். அப்படிபட்டவர்களை விட்டு அல்லாஹ் காப்பாற்றுவானாக.

***ஆதாரம் : அல் முத்கிலு லில் இமாம் இப்னு அல்ஹாஜ் அல் அப்தரியுல் மாலிகி, பாகம் 1, பக் : 260, தாருத் தராஸ், பெய்ரூத் எகிப்து.***

**3.ஷாஃபி மத்ஹபு உலமாக்களின் ஃபத்வா :**

ஷாஃபி மத்ஹபின் பேரறிஞர்களில் சஹீஹ் முஸ்லிம் கிரந்தத்திற்கு வரிவுரை எழுதிய இமாம் நவவி ரலியல்லாஹு அன்ஹு இவ்வாயத்தைப் பற்றி பெருமானாரின் திரு சன்னிதானத்தின் அதபு நடைமுறைகளை இவ்வாறு விளக்குகிறார்.

ரௌலா ஷரீஃபின் திருமுன் சென்றால் நபிகள் கோமானின் புனிதத்தையே அல்லாஹ்வின் திரு சன்னிதானத்தில் வஸீலாவாக்கி ஷஃபாஅத்தை நாடுங்கள். மேலும் ஜியாரத்து செய்யும் வேளை தோறும் இமாம் மாவர்தி அவர்களும் காளீ அபூ தபீப் அவர்களும் ஏனைய ஷாஃபி மத்ஹபின் அறிஞர் பெருமக்கள் அதபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நடந்த புனித சம்பவத்தையே ஆணித்தரமான ஆதாரமாக மேற்கோள் காட்டுகிறார்கள்.

***ஆதாரம் : அல் மஜமூ லிஇமாமின் நவவி பாகம் : 8, பக்கம் : 256 அல்முனீரியா அச்சகத்தின் வெளியீடு. எகிப்து.***

کتاب : کنزالایمان ماہنامہ مارچ ۲۰۱۱ کا ترجمہ۔

شکریہ کے ساتھ

ترجمہ: تحشیہ، تحقیق، تخریج: فہیم احمد ثقلینی ازہری

خادم التدریس والافتاء دارالعلوم فیضان شاہ ثقلین

قصبہ ککرالہ ضلع بدایون رابطہ نمبر: 09456279256

***கன்ஜுல் ஈமான், மார்ச் -2011 டெல்லி உருது மாத இதழிலிருந்து தமிழில்...***

# உருஸ் கந்தூரி விழா செய்திகள்...!

## ஸ்ரீமுஷ்ணத்தில் சந்தனக்கூடுவிழா

ஸ்ரீமுஷ்ணம் பாளையங் கோட்டை கீழ்பாதியில் அடங்கி இருந்து அருள்புரியும் மேன்மை தாங்கிய ஹஜ்ரத் சையதா ஹுசேன்பீ ரலியல்லாஹு அன்ஹா, ஹஜ்ரத் சையதினா மிரான் ஹுசேன் ஷா ரலியல்லாஹு அன்ஹு மற்றும் அடங்கி இருக்கும் மஹான்களின் சந்தனம் பூசும் சந்தனக்கூடு விழா ஹிஜ்ரி 1432 ஆண்டு முஹர்ரம் பிறை 10 வெள்ளிக்கிழமை 17.12.2010 அன்று இரவு 11.00 மணிக்கு நடைபெற்றது.

17.12.2010 அன்று மாலை 6 மணிக்கு ஆலம் மீலாது குழுவினர் மீலாது நிகழ்ச்சியும், சென்னை, நெல்லிக்குப்பம் ரிபாயி பக்கிர்மார்களின் ராதிப் சரப் மற்றும் பக்கிர்மார்களின் கவ்வாலி உருது பாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

செய்தி விளக்கம் : ஹஜ்ரத் முஹம்மத் இப்ராஹிம் குதுபுத்தீன் மீரான் அல் கஸ்ஃபி சையத் தாஹின் அலிஷா (உருஃப்) ரஸ்ஸாகுல் லாஹ்ஷா, முஹம்மத் இப்ராஹீம் சையத் காதர் (காதிரி)

## பரங்கிப்பேட்டை மஹ்மூதுபந்தரில் சந்தனக்கூடு

சிதம்பரம் தாலுக்கா, பரங்கிப்பேட்டை, மஹ்துமூது பந்தர், ஹஜ்ரத் ஷாஹ் வஜ்ஹுத்தீன் சையத் அப்துல் காதர் காதிரி வலியுல்லாஹ் அவர்கள் அடங்கிய ஹக்கா சாஹிப் தர்கா என விளங்கும் ஸ்லத்தில் ஸபர் மாதம் 26 பிறை ஹிஜ்ரி 1433 - 10.01.2011 அன்று திங்கள் மாலை 6.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது.

அது முதல் 16.01.2011 அன்று பானுவா ஜமா (பக்கீர்மார்கள்) வருகையும், 20.01.2011 வியாழன் அதிகாலை 3.00 மணிக்கு சந்தனக்கூடு விழாவும், வியாழன் மாலை விளக்கேற்றமும், 27.01.2011 புதன் இரவு 9 மணிக்கு ஹத்தம் நிறைவேறியது.

தர்கா பரம்பரை டிரஸ்டிகள் Z.சையத் ஜியாவுல் ஹக் சாஹிப், K.ஜைனுல் ஹக் சாஹிப் தலைமையில், உருஸ் காண்டிராக்டர் : S.செய்யது காதர் அவர்கள் ஏற்பாடுகளில், ஒலி,ஒளி அமைப்பு தாஜ்மஹால் ரேடியோஸ் இபுராஹிம் சாஹிப் அவர்கள் செய்து கொடுக்க, D.செல்வராஜ் அவர்கள் பந்தல் அமைக்க 19.01.2011 முதல் 29.01.2011 வரை 10 நாட்கள் வெகு சிறப்பாக உருஸ் கந்தூரி விழா ஹக்கா சாஹிப் தர்கா தெரு இளைஞர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

உருஸ் விழாவில் ஜாதி, மத, இன வேறு பாட்டை கடந்து எல்லா சமுதாய மக்களும் திரளாக கலந்து கொண்டு வலியுல்லாஹ் அவர்களின் துஆ பரக்கத்தைப் பெற்றுச் சென்றார்கள்.

## முத்துப் பேட்டை ஹஜ்ரத் ஷைகு தாவூத் காமில் வலியுல்லாஹ் கந்தூரி...

திருவாரூர் மாவட்டம் முத்துப் பேட்டையில் உள்ள ஹஜ்ரத் ஷைகு தாவூத் காமில் ஆண்டவர் பெரிய கந்தூரி 709ம் ஆண்டு விழா கடந்த 5-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவையொட்டி, அன்றைய தினம் தர்கா வாசலில் இருந்து கொடி ஊர்வலம் புறப்பட்டது. பின்னர், தர்கா சாலை, ஆசாத்நகர், திருத்துறைப் பூண்டி ரோடு, பழைய பஸ்நிலையம் வரை வந்து மீண்டும் அதே வழியாகச் சென்று தர்காவை அடைந்து கொடியேற்றப்பட்டது.

ஊர்வலத்தில் அலங்கரிக்கப்பட்ட ஏராளமான ரதங்களும், ஆட்ட குதிரைகளும் ஊர்வலத்தின் முன்னே சென்றது. கொடியேற்று விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## சந்தனக்கூடு விழா

கந்தூரி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான புனித சந்தனக்கூடு விழா 14.04.2011 இரவு நடந்தது. நள்ளிரவு 2.30மணிக்கு புனித சந்தனக்கூடு தர்காவை சுற்றி வந்தது. பின்னர், நேற்று அதிகாலை 5மணிக்கு புனித ரவுளா ஷரீஃபுக்கு சந்தனம் பூசப்பட்டது. இதை பார்க்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். விழாவில் கலந்து கொள்வதற்காக பல ஊர்களில் இருந்து நூற்றுக் கணக்கான கார், வேன்களில் மக்கள் வந்து குவிந்தார்கள்.

## பாதுகாப்பு ஏற்பாடு

பொது மக்களின் நலனை கருதி முத்துப்பேட்டை ஆசாத் நகர் பாலத்தில் இருந்து தர்கா வரை ரோட்டின் இருபுறங்களிலும் டியூப்லைட்டுகள் கட்டியிருந்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை முத்துப்பேட்டை போலீஸ் துணை சூப்பிரண்டு கந்தசாமி தலைமையில், இன்ஸ்பெக்டர் செங்குட்டுவன், சப் - இன்ஸ்பெக்டர்கள் ஜோதிமுத்துராமலிங்கம், அருள்பிரியா, சக்திவேல், கோவிந்தராஜ், பண்டாரிநாதன், வில்லியம்ஸ், ரமணி, ரவி ஆகியோர் முன்னிலையில் நூற்றுக்கணக்கான போலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை தர்கா முதன்மை அறங்காவலர் எஸ்.எஸ்.பாக்கர் அலீ மற்றும் தர்கா நிர்வாக கமிட்டியினரும் செய்திருந்தனர்.

**நன்றி : தினத்தந்தி 16.04.2011 பக் : 11**

## திருச்சி சின்ன சூரியூரில் உருஸ் ஃபாத்திஹா....

திருச்சி சின்ன சூரியூரில் **ஹஜ்ரத் ஷா மஹபூபே ஆலம் சையத் ரஹ்மானி பாபா கலந்தர்** உருஸ் பெருவிழா நான்காம் ஆண்டாக பெரு விமரிசையாக நடைப்பெற்றது.

18.4.2011 திங்கட்கிழமை ஹிஜ்ரி1432 பிறை 13 ஜாமதியுல் ஆகீர் கத்தமே குர்ஆனும், இஸ்லாமிய இன்னிசை நிகழ்ச்சியும் நடை பெற்றது. மறுநாள் 19.4.2011 செவ்வாய் கிழமை பிறை 14 ஜாமதியுல் ஆகீர் காலை 6.00 மணிக்கு **பீர் பாபா சையத் நயீம் கலந்தர் பாவாவின்** கலீபாக்களும், ஃபக்கீர் ஜமா அல்லாஹ் முரீதீன்களும், ஜமாஅத்தார்களும் மற்றும் சகோதர சகோதரிகளும் சேர்ந்து ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா தர்காவில் பாத்திஹா துஆ ஓதிய பிறகு அனைவரும் சேர்ந்து சின்ன சூரியூர் தோப்பில் ஹஜ்ரத் அவர்களின் மஜார் ஷரீஃபில் மிகச் சிறப்பாக சந்தனம் பூசினார்கள்.

## தஞ்சை கரந்தை, நாகூர் தர்கா ஷரீஃபில் கொடியேற்றுதல்...

தஞ்சை, கரந்தை, வடவாறு பாலம் அருகில் உள்ள நாகூர் ஆண்டவர் ஹஜ்ரத் குத்புல் அக்தாப் சையதுஸ் ஸாதாத் சையிதினா ஷாஹுல் ஹமீது காதர் ஒலி கஞ்சவாயி, கஞ்சபக்ஷ் பாதுஷா நாயகம் அவர்களின் ஞாபகார்த்த தர்கா ஷரீஃபில் ஹிஜ்ரி 1432 ஆம் ஆண்டு ஜமாதுல் அவ்வல் பிறை 29ல் பிரவேச காலமாகிய நாகூர் ஆண்டவருக்கு 04.05.2011 புதன்கிழமை இரவு 7.30மணிக்கு கொடியேற்றுதல் நடைபெற்றது.

இவ்விழாவில் தஞ்சை கரந்தை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீஃப் நிர்வாகிகளும், வியாபாரிகளும், பொதுமக்களும், மற்றும் சுற்றுவட்டார பொது ஜனங்களும் திரளாக கலந்து கொண்டு பாதுஷா நாயகத்தின் துஆ பரக்கத்தைப் பெற்றுச் சென்றனர்.